# I. பொருளாதாரச் செயலாற்றமும் சிக்கல்களும், கொள்கைகளும்—1973.

## 1. முன்னுரை.

உண்மை நியதிகளின்படி பார்க்கையில் 1973 இல் இலங்கை 3.5 சத வீத வளர்ச்சியை அடைந்திருந்தது. ஒப்புநோக்குகையில் 1972 இல் 2.6 சதவீதத்தை யும் 1971 இல் 1.0 சதவீதத்தையும் அடைந்திருந்தது. 1973இல் ஏற்பட்ட 1.76 சதவீதம்கொண்ட மக்கட்தொகையின் உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில் நிலையான விலைகளின்படி தனியாளின் உற்பத்தியின் அதிகரிப்பு 1.7 சதவீதமாக விளங்கியது. இதை 1972இல் ஏற்பட்ட 0.6 சதவீதம்கொண்ட தனியாளின் உண்மை உற்பத் தியின் மிகக்குறைந்த அதிகரிப்புடனும் 1971 இல் ஏற்பட்ட 1.9 சதவீதம் கொண்டவீழ்ச்சியுடனும் ஒப்பிடுவது ஏற்புடையதாகும். தெங்கு, தேயிலை உற் பத்தியின் கணிசமானஅளவு வீழ்ச்சியினுலும், ஓரளவு கால்நடை உற்பத்தி யின் வீழ்ச்சியினுலும் உண்மைத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி எதிர்பார்த் ததிலும் பார்க்க குறைந்தே காணப்பட்டது. மறுபுறம் றப்பர், உப உணவுப் பொருட்கள், அருங்கற்கள் ஆகியவற்றின் உற்பத்தி மகிழ்ச்சிதரும் முறையில் அதிகரித்தது. மிகப் பெரிய உள்நாட்டுப் பயிராக விளங்கும் நெல் உற்பத்தி இல்வாண்டில் அதிகரிப்பினைக் காட்டவில்லை. உண்மை நியதிகளின்படி, தயா ரிப்பில் கூட்டப்பட்ட பெறுமதி சிறிதளவால் அதிகரிக்க, கிடைக்கத்தக்க மூலப் பொருட்களின் சிறு அதிகரிப்பிற்கேற்க கட்டடவாக்கம் நடவடிக்கைகள் முன்னேறின.

இவ்வாண்டில் பணநிரம்பல் பெருமளவால் அதிகரித்தது. இவ்வதிகரிப் பிற்கு வங்கித் தொழிலின் அதிகரித்த வெளிநாட்டுச் செலாவணி உடைமைகளை இலங்கை ரூபாய்களில் மாற்றியமையே முதன்மைக் காரணமாகும். எனினும் 1973இல் இறுதி நான்கு மாதங்களிலும் சிறிது குறைந்த வேகத்திலேயே நாணய விரிவு செயற்பட்டது. வங்கித் தொழில் முறையில் இருந்து, அதிகரித்த நிலையில் அரசாங்கம் கடன்பெற்றதே இந்நாணயவிரிவின் தொடர்ச்சிக்கு முக்கிய காரணமாகும்

மிகப் பெருமளவு விலை அதிகரிப்புகள் 1973 இல் ஏற்பட்டது. ஒப்பு நோக்குகையில் 1971, 1972 இல் ஏற்பட்ட அதிகரிப்புகளிலும் பார்க்க இவ் வதிகரிப்பு மிக உயர்ந்த நிலையில் இருந்தது. இன்றியமையாத பண்டப் பொருட்களாகிய அரிசி, மா, சீனி ஆகியவற்றின் இறக்குமதி விலைகள், பண்டச் சந்தைகளில் இதுகாலவரை உயராத அளவிற்கு உயர்ந்து விளங்கின. வெளி நாடுகளில் நிலவிய பணவீக்க அமுக்கங்களும், நாணயக் குழப்ப நிலைகளும் இறக்கு மதிப் பொருட்களினதும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களினதும் விலைகளைப் பாதித்தன. அரசாங்கம் ஒற்ரேபரில் எடுத்த வழிமுறைகளும் உள்நாட்டு விலை களில் ஒரு தாக்கத்தை எற்படுத்தின. வாழ்க்கைச்செலவுக் குறிகாட்டியில் பெருமளவு அதிகரிப்பு ஏற்பட்டதே இதனின் தேறிய விளைவாகும். கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியின் 9.7 சதவீதம்கொண்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பிலும் பார்க்கப் பரந்துபட்ட பொருட்களின் விலை அதிகரிப்பு கணிச மான அளவிற்கு உயர்ந்திருந்தது.

பல ஆண்டுகளுக்குப் பின் ரூ 530 இலட்சம் கொண்ட தேறிய சுருக்கத்தை அரசாங்கத்தின் நிதி நடவடிக்கைகள் 1973 இல் ஏற்படுத்தின. 1971-72 இலும் பார்க்க மிகப் பெருமளவு வருவாயைப் பெற்றதனுலும், உள்நாட்டு வங்கியல்லா மூலங்களில் இருந்து கணிசமானளவு தொகையைத் திரட்டியதனுலும் அரசாங்கம் வங்கித் தொழிலில் தனக்கிருந்த கடனைக் குறைக்கத்தக்க நிலையில் இருந்தது. அத்துடன் 1968-69 இற்குப் பின் முதன்முறையாகத் தனது நடைமுறைக் கணக்கில் ஒரு மிகையை ஏற்படுத்தத்தக்க நிலையிலும் அரசாங்கம் இருந்தது. சென்ற ஆண்டிலும் பார்க்க மூலதனச் செலவில் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டது. இறைவரி மொத்த விற்பனவு வரி, ஏற்றுமதித் தீர்வைகள், வெ. செ. உ. சா. விற்பனை வருவாய் ஆகியவற்றில் உயர்ந்த வருமானத்தை அரசாங்கம் பெருமளவு பெற்றது.

சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கின் பணக்குறை 1973 இல், 1972 இலும் பார்க்கச் சிறிதளவு குறைந்திருந்தது. இறக்குமதிச் செலவு மிகப் பெருமளவால் அதிகரித்த நிலையிலும் றப்பரினதும், வழமையாக ஏற்றுமதி செய்யப்படாத சில பொருட்களினதும், சிறிய ஏற்றுமதிகளினதும் உயர்ந்த விலைகள் வெளிநாட்டுச் செலாவணியை அதிகரிப்பதற்குத் துணைநின்றன. இறுதியில் குறிக்கப்பட்ட வருவாய் கிடைத்த நிலையிலும், வெளிநாட்டுச் செலாவணியில் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட நிலையிலும் ஆண்டு முடிவில் குறுகியகாலப் பொறுப்புகள் கணிசமானளவு அதிகரித்தன. மேலும் பன்னுட்டு நாணய மீளிணைப்புகளும் அதனுல் ஏற்பட்ட இலங்கை ரூபாயின் மதிப்பிறக்கமும், இலங்கையின் அதிகரித்த வெளிநாட்டுக் கடனைத் தீர்ப்பதில் தொடர்ந்தும் பெரும் சுமையை ஏற்படுத்தின.

பணநியதிகளின்படி பார்க்கையில் மொத்த நிலையான மூலதன ஆக்கம் 1973 இல் 13 சதவீதத்தால் அதிகரித்தது. ஆனுல் பெருமளவு விலை அதிகரிப்பிற்கு இடம் கொடுத்து நோக்குகையில் உண்மையான அதிகரிப்பு 2 சதவீதமாகவே விளங்கியது.

## 2 பொருளாதாரச் செயலாற்றம்.

### (அ) மொத்தத் தேசிய உற்பத்தி.

உண்மை நியதிகளின்படி 1973இல் மொத்தத் தேசிய உற்பத்தி 3.5 சதவீதத்தால் உயர்வுற்றது. ஒப்புநோக்குகையில் சென்ற ஆண்டில் ஏற்பட்ட வளர்ச்சிவீதம் 2.6 சதவீதமாகும். 1972, 1973 ஆகிய ஆண்டுகளில் சராசரி வளர்ச்சிவீதம் 3.1 சதவீதமாக மிகக் குறைவுற்று விளங்க, 1971 உடன் முடிவடையும் 10 ஆண்டு காலப்பிரிவில் சராசரி 4.3 சதவீதமாக விளங்கியது. 1972இல் நடைமுறைக்கு வந்த ஐந்தாண்டுத்திட்டம் சராசரி 6 சதவீத வளர்ச்சி வீதத்தை எதிர்பார்க்கிறது. ஆகவே 1973இல் ஏற்பட்ட வளர்ச்சிவீதம் எதிர்பார்த்த இலக்கிலும் பார்க்க மிகக்குறைந்தே காணப்படுகிறது. எனினும் 1973இல் ஏற்பட்ட 1.7 சதவீதம் கொண்ட தனியாளின் உண்மை உற்பத்தி

1972இல் ஏற்பட்ட 0.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் சிறு முன்னேற்றத்தைக் காட்டுகிறது. இது முற்றிலும் 1973இல் ஏற்பட்ட திருந்திய பொருளாதாரச் செயலாற்றத்தினுல் ஏற்பட்டதென்று கூறமுடியாது. ஆனுல் 1972இல் 2.0 சதவீதத்தால் அதிகரித்த மக்கட் தொகை 1973இல் 1.76 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றமையே காரணமாகும். பண நியதிகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி 19.6 சதவீதத்தால் உயர்வுற்ற நிலையிலும், பெருமளவிற்கு விலைகள் அதிகரித்த 1973இன் பொருளாதாரச் சூழ்நிலையில் வைத்துப் பார்க்கையில் இவ்வெண்தொகை குறிப்பிடத்தக்க ஒரு முக்கியத்துவத்தைப் பெறவில்லை.

இரு முக்கிய ஏற்றுமதிக் கைத்தொழில்களாகிய தேயிலை, தெங்கு ஆகியவற்றின் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டிராவிடின் 1973இன் பொருளாதார செயலாற்றம் இதனிலும் சிறந்த நிலையில் இருந்திருக்கும். தெங்கு உற்பத்தி 34.7 சதவீதத்தால் பெருமளவால் வீழ்ச்சியுற தேயிலையின் வெளியீடு 1.1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. தெங்கின் விலைகள் குறிப்பிடத்தக்க முறையில் 1973இல் முன்னேற தேயிலையின் விலை ஏறக்குறைய அதே நிலையில் இருந்தது. மிகப் பெருமளவில் உற்பத்தி வீழ்ச்சியுற்றதனுல் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஈடுசெய்யும் முறையில் குறிப்பாக தெங்கு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு போதியதாய் அமையவில்லை.

வர்த்தக மாற்றுவீதம் 1960இல் இருந்து தொடர்ந்து வீழ்ச்சியுற்று 1972இல் இவ்வீழ்ச்சி முன்பு எவ்வாண்டிலும் இல்லாத அளவிற்கு மேலும் கீழ் நோக்கிச் சென்றது. 1973இல் வர்த்தக மாற்றுவீதம் 13 சதவீதத்தால் வீழ்ச்சியுற்று ஏற்றுமதிகளின் கொள்வனவு ஆற்றலைப் பெருமளவிற்கு வலிவுகுன்றச் செய்தது. 1959இன் நிலையான விலைகளின்படி ஏற்றுமதிக் கொள்வனவு ஆற்றலில் ஏற்பட்ட வீழ்ச்சி ரூ. 11,700 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. ஏற்றுமதி விலைகளிலும் பார்க்க இறக்குமதி விலைகள் மிக விரைந்த வீதத்தில் அதிகரித்தன. இது வர்த்தக மாற்று வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் அளவில் இருந்து பிரதிபலிக்கப்படுகின்றது.

உற்பத்தியாற்றலில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டி நிலையான அல்லது சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நியதிகளின்படி வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களைக் கூட்ட றப்பரும் இரத்தினக்கற்களும் துணைநின்றன. இறப்பரின் வெளியீடு 19 சதவீதத்தால் அதிகரிக்க இரத்தினக்கற்களின் மொத்த உற்பத்தி ரூ. 2,342 இலட்சமாக விளங்கியதென மதிப்பிடப்பட்டுள்ளது. தயாரிப்புத் தொழிலை முழுமையாக நோக்குகையில் கூட்டப்பட்ட பெறுமதி சிறிதளவால் அதிகரித்த நிலையிலும் உண்மை நியதிகளின்படி பார்க்கையில்மொத்த வெளியீட்டின் பெறுமதி வீழ்ச்சியுற்றுள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவகுப்பான பகுப்பு வளர்ச்சி காட்டப்பட்டுள்ளது.

## அட்டவணை I - 1

### நிலையான (1959) காரணிச் செலவு விலைகளின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவகைப்படியான அமைப்பு

| | | 1972 (ப. இ. ரூ.) | 1973 (ப. இ. ரூ.) | சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|
| 1. | விவசாயம், காட்டுத் தொழில், வேட்டையரடுதல், கடற்றொழில் ... | 3,478.4 | 3,387.6 | — 2.6 |
| 2. | சுரங்கத் தொழிலும் பார்க்குழித் தொழிலும் ... | 67.5 | 266.2 | + 294.4 |
| 3. | தயாரிப்புத் தொழில் ... | 1,400.5 | 1,417.2 | + 1.2 |
| 4. | கட்டடவாக்கம் ... | 505.0 | 516.2 | + 2.2 |
| 5. | மின்சாரம், வாயு, நீர், சுகாதாரப் பணிகள் ... | 31.0 | 31.3 | + 1.0 |
| 6. | போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித்தொடர்பு | 987.6 | 1,018.7 | + 3.1 |
| 7. | மொத்த, சில்லறை வணிகல் | 1,327.2 | 1,383.2 | + 4.2 |
| 8. | வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்துக்கள் | 135.6 | 141.9 | + 4.6 |
| 9. | குடியிருப்புகளின் உடைமை ... | 312.6 | 318.1 | + 1.8 |
| 10. | பொது நிருவாகமும், பாதுகாப்பும் ... | 522.2 | 566.6 | + 8.5 |
| 11. | பணிகள் .. | 1,334.0 | 1,379.4 | + 3.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாம் ஆண்டில், தனியார் நுகர்வின் அதிகரித்த செலவுவீதம், சேமிப்புகளைக்கூட்டி முதலீட்டங்களுக்குப் பயன்படத் தக்க முறையில் குறைந்திருக்க வேண்டியதற்கு மாறாக, பண நியதிகளின்படி பார்க்கையில் தனியார் நுகர்வுச் செலவு 1973 இல் மிக உயர்ந்திருப்பது தெரிய வருகின்றது. 1972 இல் நுகர்வுச் செலவினம் 10.4 வீதத்தால் உயர் வடைந்திருக்க, 1973 இல் அது 24.8 சதவீதத்தால் அதிகரித்தது. இவற் றில் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களினதும் சேவைகளினதும் செலவினம் 32.1 சதவீதத்தால் அதிகரிக்க, இறக்குமதிப் பொருட்களினதும் சேவைகளி னதும் செலவு 11.9 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. ஒப்புநோக்குகையில் இதற்கு முந்திய ஆண்டின் இறக்குமதிச் செலவு 16·4 சத வீதத்தால் அதிகரித்தி ருந்தது. எல்லா இறக்குமதிகளுக்கான வெளிநட்டுச் செலாவணி ஒதுக்கீடுகளிற் கடைப்பிடிக்கப்பட்ட கடும் நடவடிக்கைகளே இதற்கு ஓரளவு காரணமாகும்.

### (ஆ) 1973 இல் நிதி நாணய அபிவிருத்திகள்.

#### (i) நிதித் தொழிற்பாடுகள்

பல ஆண்டுகளுக்குப் பின்னர் முதற் தடவையாக அரசாங்கத்தின் நிதித் தொழிற் பாடுகள் ரூ. 530 இலட்சங் கொண்ட தேறிய சுருக்கத்தை ஏற்படுத் தின 1973 நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தின் நிதி நடவடிக்கைகளுக்கு ரூ. 1000 இலட்சம் அளவிலான வங்கிக் கடன்பாடு கள் தேவைப்படலாமென எதிர்பார்க்கப்பட்டது. மாறாக, வருமானத்தில் ஏற் பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் உள்நாட்டு வங்கியல்லா மூலங்களில் இருந்து பெற்ற என்றுமில்லாத அளவுடைய கடன்பாடும் வங்கித் தொழில்

முறைக்கு அரசாங்கம் பட்டிருந்த கடனை ரூ. 1,160 இலட்சத்தால் குறைக்கத் துணை நின்றது. இவ்வாண்டின்போது மத்திய வங்கியில் இருந்து பெற்ற கடன்பாடுகள் ரூ. 1,140 இலட்சத்தால் அதிகரித்தது. அத்துடன் வர்த்தக வங்கிகளிடமிருந்து அரசாங்கம் பட்டிருந்த கடன்பாடு ரூ. 4,300 இலட்சத்தாற் குறைக்கப்பட்டது. அதே வேளையில் பணநிலுவைகள் ரூ. 630 இலட்சத்தாற் குறைக்கப்பட்டன.

1973இற்கான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் ரூ. 38,800 இலட்சம் கொண்ட ஒரு மொத்த வருவாயை எதிர்பார்த்தன. இத்தொகையிலும் பார்க்க 1973ஆம் ஆண்டிற்கான தற்காலிகத் தரவு ரூ. 1,540 இலட்சத்தால் மேலதிகமாக விளங்கியது. 1971/72ஆம் ஆண்டிற்கான விகிதசம வருவாயுடன் ஒப்பிடுமிடத்து, வருவாயானது மிகப் பெருமளவால்அதிகரித்து ரூ. 7,520 இலட்சமாக (அல்லது 23 சதவீதம்) உளது. 1973ஆம் ஆண்டிற்கான ரூ. 54,480 இலட்சம்கொண்ட மொத்தச் செலவில் மீண்டெழுஞ் செலவு (முற்பணக் கணக்கிற்காய தேறிய கொடுப்பனவுகளையும் உள்ளடக்குகின்றது) ரூ. 39,050 இலட்சமாகும். இதன்விளைவாக, 1968/69ஆம் ஆண்டின் பின்னர், முதன்முறையாக, அரசாங்கத்தின் நடைமுறைக்கணக்கில் மிகை ஏற்பட்டது. 1971/72 ஆம் ஆண்டின் (விகிதசமம்) பணக் குறையான ரூ. 1,590 இலட்சத்திற்கு மாறாக, இவ்வாண்டின் மிகை ரூ. 1,290 இலட்சமாக விளங்கியது.

வருவாயிலான பெருமளவு அதிகரிப்புகள், இறைவரி, ஏற்றுமதித்தீர்வைகள் மொத்த விற்பனவு வரி, வெ.செ. உ. சா. விற்பனை வருவாய்கள் அதிகரித்தமையாலும் ஏற்பட்டது. வருமானவரிச் சேகரிப்புகள் ரூ. 2,460 இலட்சத்தால் அதிகரிக்க, மொத்தவிற்பனைவரிச் சேகரிப்புகள் ரூ 1,420 இலட்சத்தால் அதிகரித்தது வருமானவரிச் சேகரிப்புகள் அதிகரிப்புக்கு, 1972ஆம் ஆண்டிற்குரிய வரிச்சேகரிப்புகள் 1973ஆம் ஆண்டிற்குச் சேர்க்கப்பட்டமையும் ஓரளவுக்குக் காரணமாகும். மேலும் 1973ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட உரையில் எடுத்துக்கூறப்பட்டதுபோல, மேலதிக மூலவளங்களைத் திரட்டுவதற்கு எடுக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட வழிமுறைகளும் ஏனைய வருவாயிலான அதிகரிப்புக்களுக்குக் காரணமாகும். ஏற்றுமதித் தீர்வைச் சேகரிப்புக்களின் அதிகரிப்பிற்கு ஏற்றுமதிகளுக்குக் குறிப்பாக, றப்பருக்குக் கிடைத்த உயர்ந்த விலைகள் காரணமாகும். மறுபுறம் இறக்குமதித் தீர்வைகளுக்கான வருவாயிலும், சாராய விற்பனை இலாபத்திலும் சிறிதளவு வீழ்ச்சி ஏற்பட்டது. 1973 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மீண்டெழும் செலவான ரூ 38,400 இலட்சத்தினையும், மூலதனவாக்குகளுக்கு விதிக்கப்படவேண்டிய செலவினமான ரூ. 16,910 இலட்சத்தினையும் கொண்டிருந்தது. மேலும், மீண்டெழுஞ் செலவுக்கு ரூ 1,960 இலட்சத்தினையும், மூலதனச்செலவிற்கு ரூ. 1,130 இலட்சத்தினையும்கொண்ட துணைமதிப்பீடுகள் இவ்வாண்டில் நிறைவேற்றப்பட்டன. 1973ஆம் ஆண்டில் உண்மையான மீண்டெழும் செலவும் மூலதனச் செலவும், முறையே ரூ 38,570 இலட்சமாகவும் ரூ. 11,100 இலட்சமாகவும் இருந்த, மீண்டெழுஞ் செலவானது சாதாரண அதிகரிப்பு வீதத்திற் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தபொழுது மூலதனச்செலவானது. முன்னைய ஆண்டுகளுக்கு மாறாக 1973ஆம் ஆண்டில் மிதமான அதிகரிப்பினைக் காட்டி

யது. 1973ஆம் ஆண்டில் மூலதனவாக்கிலான குறைச்செலவு 19 சதவீதமாக இருந்தது. எவ்வாறுயினும், இது எதிர்பார்க்கப்பட்ட குறைச்செலவாகும்.

அரசாங்க நிதித் தொழிற்பாடுகளின் 1973இல் ஏற்படுத்திய தேறிய தாக்கமும், சென்ற இரு ஆண்டுகளின் ஒப்பீட்டுத் தரவுகளும் பின்வரும் அட்டவணையிற் சுருக்கித் தரப்பட்டுள்ளன.

### அட்டவணை I - 2
### பணக்குறையை நிதி உதவி செய்தல் 1970/71 — 1973

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1970/71 | 1971/72 | | 1973 |
|---|---|---|---|---|
| | | 12 மாதங்கள் * | 15 மாதங்கள் * | தற்காலிக மானவை |
| 1. வரவு செலவுத் திட்டப் பணக்குறை ... | 1,327 | 1,366 | 1,707 | 1,414 |
| 2. கழிவு: கடன்கழைப்பு நிதிய உதவு தொகைகள் ஆகியன ... | 244 | 330 | 412 | 433 |
| 3. தேறிய பணக்குறை ... ... ... | 1,083 | 1,036 | 1,295 | 981 |
| 4. நிதியுதவி | | | | |
| (i) வங்கியல்லா மூலங்களிலிருந்து மொத்த நிதி உதவி . | 866 | 925 | 1,156 | 1,034 |
| (அ) உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடு ... | 140 | 199 | 249 | 251 |
| (ஆ) வங்கியல்லா மூலங்களிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு . ... ... | 492 | 441 | 552 | 623 |
| (இ) வெளிநாட்டுக் கடன்களும், கொடைகளும் ... | 234 | 284 | 355 | 160 |
| (ii) வங்கித்துறையிடமிருந்து உள்நாட்டுக் கடன்பாடு ... | 94 | 226 | 283 | - 116 |
| (iii) அரசாங்கப் பண நிலுவைகளினதும், பண்ட உதவி ... | 123 | - 115 | - 144 | 63 |
| நிதிகளினதும் பயன்பாடு .... ... | 3 | - 88 | - 110 | 45 |
| (அ) வெளிநாட்டு உதவி இணைக்கிணை நிதிகள ... | 126(அ) | - 27 | - 34 | 18 |
| 5. ஐ. அ. உதவி இணைக்கிணை நிதிகளின் மாற்றத்துக்கான சீராக்கம் ... | 1 | — | — | ... |
| 6. அரசாங்க திதி நடவடிக்கைகளின் தேறிய விரிவுத்தாக்கம் (4ii, 4iii & 5) ... | 218 | 111 | 139 | - 53 |

(அ) 1971 செத்தெம்பர் இறுதியில் மத்திய வங்கி வெளிநாட்டு உதவி இணைக்கிணை நிதி ரூ. 1128 இலட்சத்தால் மேலதிக எடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது பண்ட உதவிக் கிடைப்பனவுகளைப் பதிவு செய்வதில் ஏற்பட்ட கால தாமதத்தினாலாகும். 1971ஆம் ஆண்டறிக்கையின் 157ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

* விகிதசம அடிப்படையில் அமைந்துள்ளது.

உள்நாட்டு வங்கியல்லா சந்தைக்கடன்பாடு 1973 இல் என்றுமில்லாத அளவிற்கு ரூ.6,230 இலட்சம் (தேறிய) கொண்ட தொகையை அடைந்தது. 1973இல் ரூபாய்ப் பிணைகள் வழங்கியதன் வாயிலாக திரட்டப்பட்ட மூலங்கள் ரூ. 7,600 இலட்சமாக விளங்கியது. இம்முழுத் தொகையும் வங்கியல்லா மூலங்களில் இருந்தே பெறப்பட்டன. இது 1971/72 இன் தொடர்பான (விகிதசம) தொகையிலும் பார்க்க ரூ. 2,400 இலட்சம் கூடியதாகும் வங்கியல்லாத துறையில் இருந்து இம்மூலவளங்கள் வெற்றிகரமாகத் திரட்டப்பட்டதற்கு தேசிய சேமிப்பு வங்கி, கடன்கரைப்பு நிதியங்கள், ஊழியர் சேமநிதி. காப்புறுதிக்கூட்டுத்தாபனம் ஆகியவை செலுத்திய அதிகரித்த உதவுதொகைகளே பெரிதும் துணை நின்றன. அண்மைக்காலங்களில் ரூபாய்ப் பிணைகளுக்கு செலுத்தப்பட்ட மொத்த கட்டணங்களில் ஏறக்குறைய 90 சதவீதம் இம்மூலங்களில் இருந்து பெறப்பட்டன. வெளிநாட்டு நிதியின் வருகைகள், வீழ்ச்சிப்போக்கினைக் காட்டும் இச்சூழ்நிலை

யில் அரசாங்கக் கடன் திட்டத்துக்கு வங்கியல்லா மூலங்களில் இருந்து அதிகரித்த ஆதரவு கிடைப்பது அரசாங்கத்தின் முதலீட்டத்திட்டம் பெருமளவு நிலைத்து நிற்கத் துணையாக அமைந்துள்ளது. மறுபுறம் இத்தகைய அதிகரித்த கடன்பாடுகள், பொதுப்படுகடனின் வட்டியில் பெரும் அதிகரிப்பிற்கும் ஏதுவாய் அமைந்துள்ளது 1968/69 இல் வெளிநாட்டு உள்நாட்டுக்கடனில் ரூ. 2060 இலட்சமாய் விளங்கிய வட்டித்தொகை 1974 இல் ரூபாய் 6020 இலட்சமாக விளங்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் மீண்டெழும் செலவின் முக்கிய விடயமாக இவ்வட்டிக்கொடுப்பனவுகள் இன்று விளங்குவதோடு மதிப்பிடப்பட்ட 1974 இன் மொத்த உணவு உதவு தொகைக்கு, ஏறக்குறைய சமமாகவும் விளங்குகிறது. வருங்காலத்தில் அரசாங்கத்திற்குக் கடன் திருப்பிக் கொடுத்தல், ஒரு முக்கிய பிரச்சினையாக இல்லாது இருப்பின் அரசாங்கத்தின் முதலீடுகளில் இருந்து பெரும் வருவாய் கடன்பாட்டு நிதியின் கணிசமானளவு தொகையை உள்ளடக்கும் முறையில் போதியளவு உயர்ந்திருக்க வேண்டும்.

உணவு உதவு தொகையில் ஏற்பட்ட அதிர்ச்சி தரும் அதிகரிப்பை கட்டுப்படுத்த 1973 ஒற்றோபரில் அரசாங்கம் ஒன்று திரட்டிய வழிமுறைகளை எடுத்துரைத்தது. வருமான வரி செலுத்தாதோருக்கு வழங்கப்பட்ட இலவச அரிசி ஒரு கொத்தில் இருந்து அரைக்கொத்திற்கு குறைக்கப்பட்டது. வருமான வரி செலுத்துவோர் அரைகொத்து அரிசிக்கு ரூபாய் 1/- கொடுக்க வேண்டுமென்று முடிவுசெய்யப்பட்டது. வழங்கப்பட்ட கோதுமைமா பங்கீட்டுத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு ஒரு இறுத்தலின் விலை 70 சதமாக உயர்த்தப்பட்டது அத்துடன் ஒரு ஆளுக்கு ஒரு கிழமைப்பங்கீடு ஒரு இறுத்தல் என்று நிர்ணயிக்கப்பட்டது பங்கீட்டின் கீழ் ஒரு ஆளுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு இறுத்தல் சீனியாக வழங்கப்பட்ட அளவு, முக்கால் இறுத்தலாக குறைக்கப்பட்டதோடு, பங்கீடு முறைக்கு உட்படாத வெளியில் விற்கப்படும் சீனி இறுத்தல் ஒன்றிற்கு ரூ 2/- என்று உயர்த்தப்பட்டது. உணவு உதவு தொகையில் இவ்வழி முறைகள் கசணிமாவ சேமிப்பை ஏற்படுத்துவதோடு அதே வேளையில் இவற்றின் விற்பனையில் அதிகரித்த இலாபங்களையும் ஏற்படுத்தும். வரவு செலவில் இவ்வழிமுறைகளின் முழுத்தாக்கம் 1974 இல் உணரப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. எனினும், இவ்வழி முறைகளில் இருந்து கிடைக்கக்கூடிய நன்மைகள் அரிசி, மா, சீனி ஆகியவற்றின் மிக உயர்ந்து செல்லும் இறக்குமதி விலைகள் காரணமாக பெறமுடியாத சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இது வரவுசெலவு திட்ட அமைப்பு ஓரளவு நாட்டின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகின்றது எனினும், கிடைக்கத்தக்க மூலவளங்களில் மாற்றல் கொடுப்பனவுகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்வரை மூலவளங்கள் இல்லாத காரணத்தால் அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்கள் விரும்பிய வெற்றியை ஈட்டுவது கடினமேயாகும்.

## (ii) பணமும் கொடுகடனும்.

1973, ஒகத்தில் முடிவடைந்த பன்னிரண்டு மாதங்களில் பண நிரம்பல் ரூ. 3,277 இலட்சத்தால், அல்லது 15.2 சதவீதத்தால் கணிசமானளவிற்கு உயர்வுற்றது. இவ்வென்றுமில்லாததோர் அதிகரிப்பு முக்கியமாக வங்கித்தொழில்

முறையினது வெளிநாட்டுச் செலாவணி உடைமைகளின் ரூ. 2,703 இலட்சம் கொண்ட அதிகரிப்பினுல் ஏற்பட்டது. இவ்வதிகரிப்பு இறக்குமதிகள் மீதான கட்டுப்படுத்தப்பட்ட செலவுகளுடன் ஒப்பிடுகையில் நடைமுறை ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தமையால் ஏற்பட்டதாகும். மேற்கூறிய காரணத்தால் வங்கித் தொழில்முறை பெருமளவு வெளிநாட்டுச் செலாவணி உடமைகளை வைத்திருந்தது. அத்துடன் வங்கித் தொழில்முறையில் ஏற்பட்ட தவணை வைப்புக்களின் வீழ்ச்சியும் நாணய விரிவிற்குக் காரணமாயிருந்தது. இக்காலப்பகுதியில் தனியார்துறைக்கான வர்த்தக வங்கிக்கடன்கள் சிறு மாற்றங்களைக் காட்டியிருக்கையில், அரசாங்கம் வர்த்தகவங்கிகளுக்குக் கடன்களைத் திருப்பிக்கொடுத்தது. 1972 இறுதியில் வர்த்தக வங்கி வேலைநிறுத்தத்தால் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக இக்கடன்கள் 1972இலும், நடைமுறை ஆண்டின் பிற்பகுதியிலும் உயர்வுற்றுள்ளன. பண நிரம்பலின் விரிவை ஓரளவு குறைக்க அரசாங்கத் தொழிற்பாடுகள் அரசாங்கத்துறை வர்த்தக வங்கிகளில் பண, வைப்பு நிலுவைகளை அதிகரித்தமையால் மேலும் வலுவுற்றன.

1973, ஒகத்தில் முடிவடைந்த பன்னிரண்டு மாதங்களில் வர்த்தக வங்கித் தொழிலின் குறிப்பிடத்தக்க பண்பு, வர்த்தக வங்கிகளிலுள்ள தவணை வைப்புக்களின் வீழ்ச்சியும், சேமிப்பு வைப்புக்களின் மிதமான அதிகரிப்புமேயாகும். வங்கித் தொழில் முறையிலுள்ள தவணை சேமிப்பு வைப்புக்களைப் பொறுத்தவரை, வர்த்தக வங்கிகளின் தவணை வைப்பு உடமைகளின் வீழ்ச்சி தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புக்களின் அதிகரிப்பினுல் மேலதிகமாக ஈடுசெய்யப்பட்டது. இவ்வங்கியின் வைப்பாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட வருமான வரி விலக்குகளும், எளிதான பண எடுப்பனவு முறைகளுமே இவ்வதிகரிப்பிற்குக் காரணமாயிருந்தன.

மேற்குறிக்கப்பட்ட காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளின் கேள்வி வைப்புக்களில் அதிகரிப்பு ஏற்பட்டது அதேசமயம், இவ்வங்கிகள் வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் எடுப்பனவு செய்யப்பட்டமையால், இவற்றின் கேள்வி வைப்புக்களுக்கான திரவ இருப்புச் சொத்துக்களின் விகிதத்தைக்காட்டும் திரவ நிலை வீழ்ச்சியுற்றது.

ஆயினும், உயர்வுற்ற பண நிரம்பலின்வீதம், 1973இன் இறுதி நான்கு மாதங்களில் குறையத்தொடங்கியபோதும், 11.9 சதவீதமாக அமைந்த இவ்விரிவை முன்னைய ஆண்டு அதிகரிப்புடன் ஒப்பீடுகையில், உயர்வானதாகவே விளங்கியது. நிதியாண்டொன்றின் இறுதியில் வங்கித் தொழில்முறையிலிருந்து அரசாங்கம் பெறும் கடன்பாடு அதிகரிப்பது வழக்கம். இதுவே இக்காலப்பகுதியில் பண நிரம்பலின் விரிவிற்கு மிக முக்கிய காரணமாக அமைந்தது. வங்கித் தொழில்முறையின் வெளிநாட்டு இருப்புச்சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு இதற்கு அடுத்த நிலையை வகித்தது. தனியார் துறையிலுள்ள கொடுக்கல் வாங்கல்களின் அளவு 1973, ஒகத்தில் முடிவடைந்த ஆண்டுடன் ஒப்பிடத்தக்க நிலையில் இருந்தது. இதற்கு தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடனின் அதிகரிப்பு தனியார் துறையினது சேமிப்பு வைப்புக்களின் அதிகரிப்பினுல் பண நிரம்பலின்மீது ஏற்படுத்திய மட்டுப்படுத்தப்பட்ட தாக்கமே காரணமாகும்.

1973இன் இறுதி நான்கு மாதங்களில் வர்த்தக வங்கிளிகனது பண உடமைகளின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினுல் இவற்றின் திரவநிலை விகிதம் அதிகரித்தது. சென்ற மூன்று ஆண்டுகளின் போக்கைத் தொடர்ந்து 1973ஆம் பஞ்சாங்க ஆண்டில் பண நிரம்பலில் காட்டப்பட்டிருக்கும் கேள்வி வைப்புக்களின் பங்கு, நாணயத்திலும் பார்க்கக் கூடிய வீதத்தில் உயர்வுற்றது.

1973, ஓகத்தில் முடிவடைந்த ஆண்டில் தனியார் துறைக்கான (ஏற்றுமதி உண்டியல்களையும் உள்ளடக்கும்) கொடுகடன் ரூ. 2,690 இலட்சத்தால் அல்லது 13.5 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்புநோக்குகையில், 1972, ஓகத்தில் முடிவடைந்த ஆண்டில் இவ்வதிகரிப்பு ரூ. 2,336 இலட்சம் அல்லது 13.2 சதவீதமாக விளங்கியது. வர்த்தக வங்கிக் கொடுகடனில் ஏற்பட்ட இவ்விரிவிற்கு முக்கியமாக அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கும், ஏனைய தனியார் துறை கடன் வாங்குநருக்கும் வழங்கிய அதிகரித்த கடனே காரணமாகும். 1973 இன் இறுதி நான்கு மாதங்களிலும் பண நிரம்பலின் அதிகரிப்பு குறைவுற்றிருக்கையில், தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக்கொடுகடனும், 1973, ஓகத்தில் முடிவடைந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த வீதத்தால் உயர்வுற்றது. பருவகாலப்போக்கை அடுத்து இக்காலப்பகுதியில் உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் நெற் கொள்வனவுகளுக்காக வழங்கப்பட்ட தொகையில் கணிசமானளவு மீளக்கொடுப்பனவு செய்தமையால் கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் வீழ்ச்சியுற்றது. 1972ஆம் ஆண்டைப்போன்று இவ்வாண்டு முழுவதும் மொத்தக்கொடுகடனின் பங்கு சிறிதளவால் குறைவுற்றது. இக்காலப்பகுதியில் இம்முற்பணங்களின் மீள்தற்கால அமைப்புமுறை, குறுகிய காலத்தில் மீளப்பெறும் முற்பணங்களுக்கு மாற்றமுற்றது.

அரசாங்கத்தால் நிறுவப்பட்ட சேமிப்பு, கொடுகடன் நிறுவனங்களால் வழங்கப்பட்ட கடன்களின் மொத்த அளவு சென்ற ஆண்டில், ரூ. 73 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றமையை நோக்கும்போது, 1973 இல் இக்கடன்கள் ரூ. 129 இலட்சத்தால் அதிகரித்தன.

**(இ) விலைகள்.**

விலை மட்ட அதிகரிப்பு 1973 ஆம் ஆண்டைப்போன்று முன்னெக்காலத்திலும் நிகழவில்லை. இவ்வாண்டில் கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி 1972 இன் 6.3 சதவீதத்திற்கு மாருக 9.7 சதவீதத்தால் உயர்வுற்றது. வாழ்க்கைச்செலவுக் குறிகாட்டியில் உள்ளடங்காத நுகர்வு விடயங்களின் விலைகள் மொத்தக்குறிகாட்டியிலும் பார்க்க மிக அதிகமானளவு வீதங்களால் அதிகரித்துள்ளன. மொத்த விற்பனவு வரி உள்ளடக்கத்தின் அளவை விரிவுபடுத்தியமையும், 1972 இன் பிற்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணி உரிமைச்சான்றிதழ் விலைகள் அதிகரித்தமையும், மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் விலைகளின்மீது முழுதாக்கத்தையும் ஏற்படுத்தின. விலைக்கட்டுப்பாட்டுக்குட்பட்ட பல்வேறு இன்றியமையாத விடயங்களின் விலைகள் இவ்வாண்டின்போது உயரும் முறையில் திருத்தியமைக்கப்பட்டன. அத்துடன் பண நிரம்பலில் ஏற்பட்ட கணிசமானளவு அதிகரிப்பும் விலை மட்டத்தின்மீது குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். ஆனுல், இக்காரணியின் முக்கியத்துவத்தை நிர்ணயிப்பது கடினமாகும்.

1973இல் விலைமட்டத்தைத் தாக்கும் மிக முக்கிய காரணிகள் வெளிநாட்டிலிருந்து தோன்றியுள்ளன. இறக்குமதி செய்யப்படும் இன்றியமையாத விடயங்கள் — குறிப்பாக அரிசி, கோதுமை மா, எரிபொருள், ஆடைகள், பாற்பொருட்கள் ஆகியனவற்றின் விலைகளில் பெருமளவு அதிகரிப்புகள் ஏற்பட்டன. கப்பற்செலவுகளும் பெருமளவாக அதிகரித்து விலைமட்டத்தை மேலும் உயர்த்தின. இன்னும், அதிகரித்த செலவுகளை நுகர்வோர்மீது சுமத்தி, உணவு மானியங்களை மட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் கொள்கையும் ஒரு மேலதிக காரணியாகும் மா, சீனி விலை அதிகரிப்புகளைப் பெருமளவிற்கு உயர்த்தி ஒற்றோபர் 1ஆந் திகதி எடுக்கப்பட்ட வழிமுறைகள் இம்முடிவைப் பின்பற்றிச் செய்யயபட்டவையேயாகும்.

### (ஈ) 1973 - சென்மதி நிலுவை *

1973ஆம் ஆண்டின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு, சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்குப் பணக்குறையை முற்றாக ஈடுசெய்யத் தவறியது. 1965இல் ஏற்பட்ட சிறு மிகையைத் தவிர்த்து, 1958 தொடக்கம் இப்பணக்குறைகள் தொடர்ச்சியாக ஏற்பட்டன. இவ்வாண்டில் இன்றியமையாத இறக்குமதிகளின் பெருமளவு விலையதிகரிப்புகள் இறக்குமதிக்கொடுப்பனவுகளைக் குறைப்பதற்குப் போதியளவு இடமளிக்கவில்லை. ஆயினும், சென்ற ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 1972இல் ரூ. 1,960 இலட்சமாக விளங்கிய நடைமுறைக்கணக்குப் பணக்குறை 1973இல் ரூ. 1,610 இலட்சமாகக் கணிசமானளவிற்குக் குறைவுற்றது இறக்குமதி விலைகளின் பெருமளவு அதிகரிப்பும், பன்னாட்டு நாணயங்களின் குழம்பியநிலையால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளும் ஏற்பட்டிராவிடின், இப்பணக்குறை குறைவுற்றிருக்கும். மிகக்கடுமையான முறையில் வெளிநாட்டுச்செலாவணியை ஒதுக்கீடு செய்தமையால் இறக்குமதிச்செலவு ஆகக்குறைந்த அளவிற்குக் குறைக்கப்பட்டது.

ஐம்பதாம் ஆண்டுகளின் இறுதியில் வீழ்ச்சியுற்றிருந்த ஏற்றுமதிவிலைகள், இவ்வாண்டுமுழுவதும் தொடர்ந்து அதிகரித்து வர்த்தகக்கணக்கிற்கு வலியூட்டும் முறையில் படிப்படியாக உயர்ந்து, 1973இன் காலாண்டு இறுதியில் உயர்மட்டத்தை அடைந்தது. 1972இல் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 18,980 இலட்சமாயிருந்து, 1973இல் ரூ 23,460 இலட்சமாக உயர்ந்தது. அதேவேளையில் தொடர்பான இறக்குமதிக்கொடுப்பனவுகள் ரூ. 21,530 இலட்சமாகவிருந்து, ரூ. 26,440 இலட்சத்திற்கு உயர்ந்தன. இவ்விதம் இறக்குமதிக் கொடுப்பனவுகள் அதிகரித்தமைக்கு இறக்குமதிகளின் அளவு அதிகரித்தமையல்ல காரணம். மாறாக இறக்குமதிப்பொருட்களினதும், கப்பற் கட்டணங்களினதும் உயர்ந்து சென்ற விலைகளே பெருமளவு காரணமாய் விளங்கின. இது 1972இல் 158 இலிருந்து 1973இல் 209 ஆக உயர்ந்த எல்லாப் பண்டங்களினதும் இறக்குமதி விலைக்குறிகாட்டியில் பிரதிபலிக்கப்படுகிறது.

---

* இப்பிரிவில் பயன்படுத்தப்பட்ட எண்தொகைகள் பதிவுசெய்யப்பட்ட செலாவணியை அடிப்படையாகக் கொண்டவை.

1973இல் நிதி உதவவேண்டிய மொத்த மூலவள இடைவெளி ரூ. 15,180 இலட்சமாக விளங்கியது. ஒப்புநோக்குகையில், 1972இல் இருந்த தொகை ரூ. 12,910 இலட்சமாகும். இவ்விடைவெளி நன்கொடை உதவியினுலும் நீண்ட கால அரசாங்க மூலதனத்தினுலும் குறுகியகாலக் கொடுகடன்களாலும் நிதியீட்டப்பட்டது 1971இலும் 1972இலும் நிலவிய மட்டத்திலும்பார்க்க 1973இல் வழங்கப்பட்ட நன்கொடை உதவி சிறிதளவால் வீழ்ச்சியுற்றது இதேமுறையில் நீண்டகால அரசாங்க மூலதனமும் 1972இல் ரூ. 4,150 இலட்சமாக விளங்கி, 1973இல் ரூ. 3,350 இலட்சமாக வீழ்ச்சியுற்றது. குறுந்தவணைக் கொடுகடன்களைப் பொறுத்தவரை பண்ட உதவி உடன்படிக்கைகளை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தாமதம், 1973இல் நிலவிய மட்டத்திலிருந்து ரூ. 940 இலட்சத்திற்குப் பண்ட உதவி வீழ்ச்சியுறக் காரணமாயிருந்தது. உதவிகளும் நீண்டகால மூலதனமும் மூலவள இடைவெளியை நிரப்பப் போதியதாய் இல்லாததினுல் இதுகாலவரை தங்கியிருந்ததிலும்பார்க்க கூடியளவிற்கு இந் நாடு குறுகியகாலக் கொடுகடனில் தங்கியிருக்கவேண்டிய நிலையை ஏற்படுத்தியது. எனவே, பெறப்பட்ட குறுகியகாலக் கொடுகடன் ரூ. 10,210 இலட்சமாக விளங்கியது. திருப்பிக்கொடுக்கப்பட்ட குறுகியகாலக் கொடுகடன் ரூ. 7,390 இலட்சமாக விளங்கியது. 1972இல் ஏற்பட்ட ரூ. 90 இலட்ச வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1973 இல் பெறப்பட்ட குறுகியகாலக் கொடுகடன்களின் அதிகரிப்பு ரூ. 2,820 இலட்சமாகும்.

1973 இல் துணைநில் ஒழுங்குகளோ சிறப்பு எடுப்பனவு உரிமைகளின்கீழ் ஒதுக்கீடுகளோ இல்லாதிருத்தலால் பன்னுட்டு நாணய நிதியிலிருந்து பெற்ற எடுப்பனவுகள், ஏற்றுமதி தளம்பல்களுக்கு நிதியுதவி செய்யும் வசதிகளை மட்டுமே உள்ளடக்கி விளங்கின. இவ்வசதியின்கீழ் ரூ. 1,370 இலட்சம் எடுப்பனவு செய்யப்பட்டது.

சுற்றுலா வர்த்தகத்திலிருந்து பெற்ற வெளிநாட்டுச் செலாவணி வரவுகள் சென்மதி நிலுவையின் சேவைக்கணக்கிற்குத் தொடர்ந்தும் வலுவூட்டின. சுற்றுலா வருவாய்கள் 1973 இல் இரண்டு மடங்கிற்கு மேலான அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கையில், சுற்றுலாப் போக்குவரத்திலிருந்து பெற்ற தொகை 39 சதவீதத்தால் அதிகரித்தது.

**பொருளாதாரப் பிரச்சனைகளும் சிக்கல்களும்.**

*(அ) பொருளாதார வளர்ச்சியும் அதற்குரிய திட்டமும்.*

உள்நாட்டு நுகர்விற்கு உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று வலியுறுத்தும் முறையிலேயே பொருளாதாரக்கொள்கை 1973இல் அமைந்திருந்தது. அரிசி, உப-உணவுப்பொருட்கள் மற்றும் இறக்குமதி உணவிற்கான உள்நாட்டுப் பதிலீடுகளை விரைந்தமுறையில் உற்பத்தி செய்வதே முக்கிய நோக்கமாக இருந்தது. அரிசி, இறக்குமதியில் நாடு பெருமளவு தங்கியிருந்ததனுல் முன் எப்பொழுதிலும் பார்க்க, உற்பத்தியை அரசாங்கம் பெருமளவு வலியுறுத்தியது. இறக்குமதி உணவுப்பொருட்களாகிய அரிசி, மா, சீனி ஆகியவற்றிற்கு உலகச்சந்தை விலைகள் மிகப் பெருமளவுக்கு இவ்வாண்டில் அதி

கரித்திருப்பது இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் பெரும் பங்கை வருங்காலத்திலும் பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதற்கு மாறாக உணவு இறக்குமதிக்கே ஒதுக்க வேண்டியிருக்கின்றதென்பதை உணர்த்தி நிற்கின்றது. இது முதலீட்டத்திற்கு கிடைக்கக்கூடிய மூலதனங்களைப் பெருமளவு குறைப்பதுடன் நாட்டின் வளர்ச்சியையும் தடைசெய்யும்.

நடைமுறை ஆண்டின் மொத்தத் தேசிய உற்பத்தியின் மதிப்பீட்டிற்குள் உணவு உற்பத்தி இயக்கத்தின் முழுத்தாக்கம் உள்ளடக்கப்படவில்லை. காரணம் 1973/74 பெரும்போக உற்பத்தியும், உப-உணவு உற்பத்தியின் பெரும்பகுதியும் 1974 மொத்தத் தேசிய உற்பத்தி மதிப்பீடுகளுக்குள்ளேயே கணிக்கப் படும். முன்பு கூறப்பட்டதற்கமைய 1972இற்கும் 1973இற்கும் இடையில் நெல் உற்பத்தி மட்டத்தில் ஒரு வேறுபாடு இல்லையெனினும் தேங்காயினதும், தேயிலையினதும் வெளியீடு கணிசமானளவு குறைவுற்றது. குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களை உண்மையான உற்பத்தியிற் காட்டிய துறைகள், உப-உணவுப் பொருட்களும், சிறு ஏற்றுமதிப்பயிர்களும் இரத்தினக்கற் கைத்தொழில்களுமே யாகும்.

இக்காரணங்களுக்கு இடம்விட்டு நோக்கின் 1973இல் மொத்தத் தேசிய உற்பத்தியிலேற்பட்ட அதிகரிப்பை ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்கு வீதங்களுடன் ஒப்பிடுகையில் ஏமாற்றம் தருவதாகவே விளங்குகின்றது. ஒரு ஆண்டுக்குச் சராசரி 6 சதவீத வளர்ச்சி வீதத்தை ஐந்தாண்டுத்திட்ட எதிர்பார்க்கையில் 1973இல் உண்மை நியதிகளின்படி ஏற்பட்ட வளர்ச்சிவீதம் 3.5 சத வீதமாக மட்டுமே விளங்கியது. இவ்விடத்தில் ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைக்கு வராத 1971இற்கு முந்திய 10 ஆண்டுகளில் ஏற்பட்ட சராசரி வளர்ச்சியாகிய 4.3 சதவீத வளர்ச்சியையும் ஒப்பிடல் ஏற்புடையது. ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாம் ஆண்டாக 1973 விளங்குகின்றது. முன்பே குறிப்பிட்டதற்கமைய 1972இலும் 1973இலும் ஏற்பட்ட வளர்ச்சியின் சராசரி வீதம் 3.1 சதவீதமாக விளங்கியது.

இலங்கையில் இப்பொழுது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்றும் ஆண்டு நடைபெறுகிறது. 1974இலும் அதையடுத்த இரு ஆண்டுகளிலும் விரைந்த நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டாலன்றி திட்டத்தில் குறிப்பிட்ட இலக்குகளை அடையும் முறையில் நாடு முன்னேறுவது கடினம் என்பதையே கடந்த இரு ஆண்டுகளின் பொருளாதார வளர்ச்சியின் போக்கு எடுத்துக்காட்டுகின்றது. 1974 இனைப் பொறுத்தவரை பெரும்போக விளைச்சல் எதிர்பார்த்தற்கமையவே அமைந்துள்ளதுபோற் தோன்றுகின்றது. ஆனல் உரம், விவசாய இரசாயனங்கள் மற்றும் உள்ளீடுகளின் பற்றுக்குறை காரணமாகவும், இவற்றின் விலைகள் தொடர்ந்து உயர்ந்துசெல்லும் போக்கினலும் சிறுபோக விளைச்சல் நன்ருய் அமையுமோ என்று கூறமுடியாமல் இருக்கிறது. பெரும்பான்மை மக்களால் பயன்படுத்தப்படும் உயர்விளைச்சலைத் தரும் நெல்வகைகள் பெருமளவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட உரத்தினலும், விவசாய இரசாயனங்களிலும் தங்கியிருப்பதினல் இவ்வுள்ளீடுகளின் தட்டுப்பாடுகள் இனிவரவிருக்கும் பயிர்ச்செய்கைக் காலத்தில் உற்பத்தியைப் பாதிக்கக்கூடும் தேசிய உற்பத்தியில் பெருமளவு பங்கை வகிக்கும் முக்கிய உற்பத்தித்துறைகளான தேயிலை தெங்கு உற்

பத்திகளும் இவ்விதமே பாதிக்கப்படக்கூடும். இவற்றுடன் காணிச்சீர்திருத்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதால் பெருந்தோட்டத்துறையில் ஏற்பட்ட தெளிவற்ற சூழ்நிலைகள் இம்முக்கியதுறையின் உற்பத்தியின் வீழ்ச்சியை மேலும் அதிகரிக்கக்கூடும். உணவுப்பொருட்களினதும், மசகெண்ணெயினதும் கைத் தொழில் மூலப்பொருட்களினதும் பெருமளவு அதிகரித்த விலைகள் வேளாண்மை உற்பத்தியாற்றலை அதிகரிக்கப் பெருந்துணையாய் விளங்கும். இன்றியமையாத உள்ளீடுகளைக் கொள்வனவுசெய்யக் கிடைக்கத்தக்க வெளிநாட்டுச்செலாவணி யையும் குறைக்கக்கூடும்.

மீளாய்வுசெய்யப்படும் ஆண்டிலும் அதற்கு முந்திய ஆண்டிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் திட்டம் உருவாக்கப்பட்ட காலத்தில் நிலவிய அமைப்பு பலவகை களில் மாற்றமுற்றிருப்பதையே உணர்த்துகிறது. உணவிலும், மூலப்பொருட் களின் நிரம்பல்களிலும் உலகில் காணப்பட்ட பற்றுக்குறையும், பன்னாட்டு நாணயத்தில் நிலவிய குழம்பியநிலையும், எண்ணெய் விலையின் அதிகரிப்பும், உணவுப்பொருட்களினதும் மூலப்பொருட்களினதும் தயாரிக்கப்பட்ட பொருட் களினதும் இறக்குமதி விலைகள் உயர்ந்ததும், அண்மைக்காலத்தில் யாம் அனு பவித்த இடர்ப்பாடுகளாகும். மிக உயர்ந்தமட்டத்தில் அபிவிருத்தி முயற்சியை வைத்திருப்பதற்கு மேலே குறிக்கப்பட்ட பொருட்கள் இன்றியமையாதவை யாகும். அதேவேளையில் இத்தகைய பணவீக்க அமுக்கங்கள் ரூபாயின் கொள் வனவு ஆற்றலை வலிவுகுன்றச்செய்ததோடு அரசாங்கத்தினதும் தனியாளின தும் உண்மை சேமிப்புகளையே மிகப்பெருமளவு குறைத்துவிட்டன. முதலீட்டத் திற்கு உள்நாட்டு மூலவளங்களை வழங்குவதற்கு சேமிப்பு மட்டத்தைக் கணிச மானளவு படிப்படியாக உயர்த்துவதென்றும் திட்டம் எதிர்பார்த்தது. ஆண் டிற்கு 12.5 சதவீதம் என்றிருந்த திட்டகாலத்திற்கு முந்திய சேமிப்பின்நிலை திட்டக்காலப்பிரிவில் ஆண்டிற்கு 17 சதவீதம் என்ற அளவிற்கு உயரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. சராசரியாகப்பார்க்கையில் 1972இலும், 1973இலும் சேமிப்புகளின் உண்மையான மட்டம் ஏறக்குறைய 12.8 சதவீதமாக விளங் கியது. 1973இன் பொருளாதாரத்தைப் பாதகமாகத் தாக்கிய காரணிகள், திட்டம் உருவாகியபோது எதிர்பார்க்கப்படவில்லை பணவீக்கமும், மூலப் பொருட்களினதும் மூலதனப்பொருட்களினதும் விலையில் ஏற்பட்ட அதிகரிப் புக்கள் முதலீட்டம் செய்யவேண்டிய அமைப்பைக்குழப்பி உண்மையான மூல வளங்களின் அளவையும் குறைத்து திட்டத்தில் எவையெவை முதன்மைபெற வேண்டும், கையாளவேண்டிய வழிமுறைகள் யாவை என்பவைபற்றியெல்லாம் புதியமுறையில் சிந்திக்கச்செய்துள்ளன. இப்பொழுது கிடைக்கத்தக்க மூல வளங்களுக்கேற்ப திட்டத்தில் முதன்மைபெறவேண்டியவை எவை, யாம் கையாள வேண்டிய வழிமுறைகள் எத்தகையவை என்பவைபற்றியெல்லாம் மீள ஆய்வு செய்யவேண்டிய தேவையை இப்புதிய சூழ்நிலைகள் தோற்றுவித்துள்ளன போலும். உணவு வழங்குவதில் ஏற்பட்டுள்ள அதிகரித்த தட்டுப்பாடுகளை நினைவிற்கொண்டு, உணவைப்பெறுவதற்கு ஏற்ற வழிகளைக்காண உள்நாட்டு மூலவளங்களைப் பன்முகப்படுத்தும்முறையில் புதுவகை முதலீடுகளுக்கு முதன்மை கொடுப்பது பொருத்தமுடையதாகும். எம் இயலளவிற்கேற்கவும் தெளிவான நோக்குகளுடனும், விரைந்த நிலையில் நல்லமுடிபுகளைக்காணும் ஆற்றலுடன் குறிப்பாக இன்றியமையாத நுகர்வுப்பொருட்களாகிய அரிசி, சீனி, தானியங் கள், கால்நடை, மீன் உற்பத்திகள் ஆகியனவற்றின் உற்பத்தியில் வெற்றி காண ஒரு திட்டத்தைத் தோற்றுவித்தல் ஏற்புடையதாகும்.

**(ஆ) வருமானப் பங்கீடு.**

மொத்தத் தேசிய உற்பத்தியை பொருளாதார வளர்ச்சியின் ஏற்ற அளவு கோலாகக் கொள்வதிலுள்ள குறைபாடுகளை எம் முன்னைய சில ஆண்டறிக் கைகள் சுட்டிக்காட்டியதோடு உண்மைநிலையை உணர்த்த ஏனைய சமூகப் பொருளாதாரக் குறிகாட்டிகளையும் கவனத்திற்கு எடுக்கவேண்டிய தேவையை யும் குறித்துள்ளன. அண்மைக்காலங்களில் உலக வங்கி, பன்னாட்டு நாணய நிதி போன்ற நிறுவனங்கள் அபிவிருத்தி அடையும் நாடுகளில் வருவாய்கள் பங்கிடப்படும் முறையில் மிகக்கூடிய கவனம் செலுத்தியுள்ளது. உண்மையான மொத்தத் தேசிய உற்பத்தி நியதிகளின்படி நோக்குகையில் இன்றைய அபி விருத்தி முயற்சி போதிய முன்னேற்றத்தைக் காட்டாதபோதும் ஏனைய சமூக பொருளாதாரக் குறிகாட்டிகளைப் பயன்படுத்தின் பெருமளவு சமநிலையில் அபிவிருத்தியின் தாக்கத்தை யாம் மதிப்பிடமுடியும். ஆசிய நிலப்பரப்பைப் பொறுத்தவரை ஏனைய நாடுகளிலும்பார்க்க வருவாயை மீளப்பங்கிடும் இத் துறையிலாவது இலங்கை முன்நிற்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மத்திய வங்கியினுல் *1953* இலும் *1963* இலும் *1973* இலும் முறையே நடாத்தப்பட்ட மூன்று நுகர்வோர் நிதி அளவைகளில் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் வருவாய் பகிர்ந்தளிக்கப்பட்ட மாற்றங்கள் பகுப்பாய்வு செய்யப் பட்டுள்ளன. *1953* இனதும் *1963* இனதும் அளவைகளின் தரவை ஒப்பிடும் போதும் வருவாய் பங்கிடப்பட்ட முறையில் குறிப்பிடத்தக்க சமத்துவப் போக்கு நிலவியதாகத் தெரியவில்லை. எனினும், *1973* இன் முதற்பகுதியில் நடாத்தப்பட்ட நுகர்வோர் நிதி அளவையின் தரவின்படி பார்க்கையில் பெரு மளவு சமத்துவத்தை நாடும் முறையில் குறிப்பிடத்தக்களவு வருவாய்பகிர்ந் தளிக்கப்பட்டிருப்பது ஊக்கம் ஊட்டுவதாகும். வருமானம் பெறுவோரை வரு மான அடிப்படையில் பத்துப்பத்தாக வகுத்து ஒவ்வொரு வகுப்பினரின் விவ ரங்களைக் கீழேயுள்ள அட்டவணை தருகின்றது.

**அட்டவணை I - 3**

**வருவாய் பெறும் ஒவ்வொரு பத்துப் பேரும் பெற்ற வருவாயின் மொத்த சதவீதம் (முழுத் தீவின் அடிப்படையில்)**

| | வருவாய் பேறும் ஒவ்வொரு பத்துப்பேரும் | | |
|---|---|---|---|
| | 1953 | 1963 | 1973 |
| ஆக உயர்ந்தது .. .. | 42.49 | 39.24 | 29.98 |
| இரண்டாவது .. .. | 14.16 | 16.01 | 15.91 |
| மூன்ருவது .. .. | 10.39 | 11.46 | 12.65 |
| நான்காவது .. .. | 7.94 | 8.98 | 10.56 |
| ஐந்தாவது .. .. | 6.31 | 6.82 | 8.75 |
| ஆருவது .. .. | 5.71 | 5.55 | 7.10 |
| ஏழாவது .. .. | 4.37 | 4.51 | 5.70 |
| எட்டாவது .. .. | 3.56 | 3.56 | 4.38 |
| ஒன்பதாவது .. .. | 3.56 | 2.70 | 3.17 |
| ஆகக் குறைந்தது .. .. | 1.51 | 1.17 | 1.80 |

மூலம்: 1953, 1963 ஆண்டுகளின் இலங்கை நுகர்வோர் நிதி களின் அளவையின் அறிக்கைகள். 1973 அளவை யின் அறிக்கை இன்னு வெளியிடப்படவில்லை.

இத்தகைய வருவாய் மாற்றங்களை அளப்பதற்கு பொதுவாகக் கையாளப் படும் குறிகாட்டியான ''கினியின் செறிவு விகிதம்'' (Gini's Concentration Ratio) நாட்டின் முழுமையான விகிதம், 1963இல் 0.41 ஆக வீழ்ந்துள்ளதைக் காட்டுகி றது. 1973இன் தரவின்படி இத்தகைய வருவாய்ப்பங்கீட்டின் குறிப்பிடத்தக்க சமபோக்குவாய்ந்த மாற்றம் நகரத்துறை கிராமியத்துறை ஆகிய இரு துறைகளி லும் காணக்கூடியதாய் இருக்கிறதைக் காட்டுகிறது. பெருந்தோட்டத்துறை யைப் பொறுத்தவரை வருவாய்ப்பங்கீட்டுமுறை குறைந்தளவு சமபோக்குவாய்ந்த தன்மையையே காட்டுகிறது. இதற்கு ஓரளவு காரணம் தயாரிப்பு, சேவைத் துறைகளுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்டத்துறையில் வழங்கப்பட்ட கூலிகள் பெருமளவு மாறுதலுக்கு உட்படாமல் இருந்தமையுடன், செயல்ஒழுங்குமுறைக் காரணத்திற்காக 1963 இன் அளவையில், பெருந்தோட்டங்களின் முகாமை மட்ட அலுவலர் இம்மாதிரியில் அடங்கவில்லை என்றே கூறவேண்டியிருக்கிறது. ஆனால் 1973 இன் அளவையின் மாதிரியில், இவர்கள் பாதியளவு அடக்கப் பட்டனர். துறைவகைப்படியான ஒன்றுதிரட்டிய விகிதங்கள் கீழே தரப்பட் டுள்ளன.

### அட்டவணை 1 – 4

### துறைவகைப்படியான செறிவு வீதங்கள் (வருமானம் பெறுவோர்)

| ஆண்டு | நகரம் | கிராமம் | பெருந்தோட்டம் | தீவு அனைத்தும் |
|---|---|---|---|---|
| 1953 | — | — | — | 0.50 |
| 1963 | 0.49 | 0.44 | 0.27 | 0.49 |
| 1973 | 0.40 | 0.37 | 0.37 | 0.41 |

மூலம்: இலங்கை நுகர்வோர் அளவைகள்,
இலங்கை மத்திய வங்கி.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளந்திட, கூடியளவு எண்ணிக்கை யுடைய அனைத்தையும் உள்ளடக்கும் குறிகாட்டிகளைக் கையாளின், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதிலும் பார்க்கப் பரந்தளவில் அபிவிருத்தி இலங்கையில் ஏற்பட்டிருப்பதை உணரக்கூடியதாய் இருக்கும். அத்துடன் குறைந்த வரு மானம் பெறும் வகுப்பினர் பெருமளவு நன்மைகளைப் பெற்றுள்ளனர். இலங் கையின் அபிவிருத்தி முயற்சியை, உயர்ந்தளவு பொருளாதார வளர்ச்சியுடைய ஆனால் வருவாயைப் பங்கிட்டு வழங்குவதில் சமநிலையின்மைப்போக்கைக்காட்டும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்குதல் பொருத்தமுடையதாகும். வருவா யைப் பெருமளவு சம நிலையில் பங்கிட்டு ஓரளவு குறைந்தவீத வளர்ச்சியுடன் விளங்குவது, வருவாயை இவ்விதம் பங்கிடாது பெரு வளர்ச்சியைக் காட்டு வதிலும் பார்க்க, விரும்பத்தக்கது. 1973 இன் தரவின்படி பார்க்கையில் வரு வாயையும் செல்வத்தையும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்குமுறை, அரசாங்கத்தின் திட்டமிட்ட கொள்கையின் விளைவே என்பது தெரியவருகிறது. குறைந்த வரு மானம் பெறும் கூலியாட்களின் கூலிகள் சீராக்கம் செய்யப்பட்டிருப்பதும், செல் வத்தைப் பகிர்ந்தளிக்கும் நோக்குடன் வரியிறுப்பு முறைகளிலும் மற்றும் ஏனைய வழி முறைகளிலும், குறிப்பாக காணிச்சீர்திருத்தத் திட்டம் வாயிலாக அரசாங் கம் கைக்கொள்ளும் நடவடிக்கைகள் எம் முன்னைய கூற்றினை வலியுறுத்தும்.

10 JUN 2009
LIBRARY & INFORMATION CENTRE
Communications Department

### (இ) வேலையின்மையும் மக்கட்தொகையும்

வருவாய்ப் பங்கீட்டு அளவில் கூடியளவுக்கு சமத்துவத்தை ஏற்படுத்தியமை பொருளியல் நிலையில் இலங்கைக்குச் சார்பாக அமைகையில், நாட்டில் வேலையின்மையும், கீழுழைப்பும் அதிகரித்துக் காணப்படல் கவலைதரும் அம்சமாகும். இது, 1973இன் மூன்றும் காலாண்டுப் பகுதியில் இலங்கை மத்திய வங்கியினால், செய்யப்பட்ட தொழிலாளரின் தொழில்நிலை வீதம் பற்றிய அளவீட்டின்படி, குடும்பப் பெண்களைத் தவிர்த்து, வேலையற்றோர், கீழுழைப்பிலுள்ளோர்களை உள்ளடக்கிய தொழிலாளர் எண்ணிக்கை மக்கட்தொகையில் 35.5 சதவீதமாக விளங்கியது. மேலும், இவ்வளவீட்டுத் தரவுகளில், தொழிலாளர் எண்ணிக்கையில், குடும்பப்பெண்கள் தவிர, 17.4 சதவீதமானோர் வேலையற்றுக் காணப்படுகின்றனர். 1973ஆம் ஆண்டு நடுப்பகுதியில் காணப்பட்ட மக்கட்தொகையின்படி, இத்தீவில் 7,93,000 ஆட்கள் வேலையற்றிருந்தனர். இறுதியாகக் கூறப்பட்ட இத்தரவை, உலக வேலைவாய்ப்புத் திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட 1969/70ஆம் ஆண்டு சமூகப் பொருளாதார அளவீட்டிலிருந்து பெற்ற "தொழில் வாய்ப்புக்களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ற தொழிலை வழங்கல்'' என்ற தலைப்புக்கொண்ட பன்னாட்டுத் தொழில் அமைப்புக் குழுவினது அறிக்கையின் வேலையின்மை மதிப்பீடுகளுடன் ஒப்பிடல் ஏற்புடையது. இவ்வறிக்கையின்படி, வேலையற்றோர் எண்ணிக்கை, மொத்த வேலைப்படையில் 5,55,000 ஆட்கள் அல்லது 14 சதவீதமானோர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் 15 வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்டோர் காணப்படுகின்றனர். மேலும், 1969/70ஆம் ஆண்டு சமூகப்பொருளாதார அளவீட்டினை அடுத்து, அதிகரித்த வேலையின்மைக்கு 1950 களிலும் முன் 1960 களிலும் ஏற்பட்ட உயர்ந்த பிறப்பு வீதத்தினால் முதல் தடவையாக அதிகரித்த இளைஞர்கள் வேலைப்படையினைச் சேர்ந்தமையே காரணமாகும். மேலும், கடந்த சில வருடங்களாக அரசாங்கத் தேர்வுகளை எடுக்கும் இளைஞரின் தொகை படிப்படியாக அதிகரித்து வருகின்றது. இதுவே, அண்மையிலோ அன்றி சேய்மையிலோ வேலைநாடுவோரின் எண்ணிக்கையை ஓரளவு எடுத்துக்காட்டும் குறிகாட்டியாக அமைகிறது

இந்நிலைமையில், கவனிக்கவேண்டிய முக்கிய அம்சமென்னவெனில், 1973 ஆம் ஆண்டில் சனத்தொகை வளர்ச்சி வீதமானது சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளமையேயாகும். கடந்த மூன்று ஆண்டுகளாக மக்கட்தொகை வளர்ச்சி வீதமானது ஏறக்குறைய 2.0 சதவீதமாகக் காணப்பட்டது. ஆனால் இது 1973ஆம் ஆண்டில் மிகக்கணிசமாக வீழ்ச்சியுற்று 1.76 சதவீதமாக அமைந்துள்ளது. மேலும் இவ்வாறு அதிகரித்துச்சென்ற மக்கட்தொகை வீதம், சடுதியாக வீழ்ச்சியுற்றமையினைத் திட்டவட்டமாக எடுத்துக்கூறுவதற்குப் போதியளவு தகவல்கள் இல்லை. எவ்வாறாயினும், பிறப்புவீதம் வீழ்ச்சி அடைந்தமையும், இறப்பு வீதம் அதிகரித்தமையும், இந்திய மரபுவழி மக்களின் வெளியேற்றம் அதிகரித்தமையும், இம்மாற்றத்திற்கு ஓரளவு காரணமாக இருக்கும் என அறியத்தரப்பட்டுள்ளது

மேலும் கடந்த 3 ஆண்டுகளாக அதிகரித்துக் காணப்பட்ட வேலையற்ற தன்மையும், பொருளாதார வளர்ச்சிவீதம் ஓரளவு கீழடைந்து காணப்பட்ட

மையும், சனத்தொகை வளர்ச்சிவீதத்தினைக் குறைப்பதற்கு, ஒன்றுதிரட்டிய நிலைத்துநிற்கும் முயற்சி எடுக்கவேண்டிய தேவையின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது. மேலும், ஆண்டொன்றிற்கு 2 சதவீதமாகத் தற்போது காணப்படுகின்ற சராசரித் சனத்தொகை அதிகரிப்பு வீதத்தின்படி, சனத்தொகையானது, இந்நூற்றுண்டின் இறுதிப்பகுதியில் இரண்டு மடங்காகும். அத்துடன் வெளிநாட்டுச் செலாவணியிலும் மற்றும் உண்மையான மூலவளங்களிலும் ஏற்படக்கூடிய போதாமை, உணவு வழங்கல் தொடர்ந்தும் முக்கிய பிரச்சனையாக விளங்குவதற்கு காரணமாய் அமையும். மேலும், இத்தகைய பிரச்சனைகள் இருப்பதன் காரணமாக சனத்தொகை வளர்ச்சி வீதத்தினை மேலும், கட்டுப்படுத்த நடைமுறைக்கு ஏற்ற திட்டத்தை மேற்கொண்டால், அரிசியிலும், ஏனைய முக்கிய உணவுப்பொருட்களிலும் தன்னிறைவை அடைதல் எளிதாக அமையும். இத்தகைய சூழ்நிலையில், சனத்தொகை பற்றிய திட்டத்தில் அரசாங்கத்தின் தீவிரமான பங்கு விரும்பத்தக்கதாக இருப்பதுடன், சனத்தொகை பற்றிய கொள்கையினை இரண்டாம் இடத்திற்கு தள்ளுவதும் தவிர்க்கப்படவேண்டும். மேலும் இக்கொள்கையானது, பொருளாதார அபிவிருத்திக்கான பொதுத்திட்டத்தில் இரண்டறக்கலந்து விளங்கல்வேண்டும்.

**(ஈ) வேளாண்மை**

உள்நாடு

1972/73ஆம்ஆண்டு பெரும்போக காலத்தின் நெற்பயிர்ச் செய்கைக்குட்படுத்தப்பட்ட நிலப்பரப்பளவானது, 1970/71 ஆம் பயிர்ச்செய்கை ஆண்டிற்கு முன்னைய 5 பெரும்போக காலங்களில் காணப்பட்ட அளவினையே கொண்டிருந்தது. 1971/72 ஆம் ஆண்டு பெரும்போக காலத்தில் ஓரளவு கூடிய நிலப்பரப்பளவு பயிர்ச் செய்கைக்கு கீழ்கொண்டு வரப்பட்டாலும், 1972/73ம் ஆண்டு பெரும்போக காலத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு, பயிரழிவு குறைந்து காணப்பட்டமையினுல் அதிகரித்துக் காணப்பட்டது. மேலும் விளைச்சலானது பொதுவாக நோக்குமிடத்து பிற்கூறப்பட்ட காலத்தில் குறைவாக இருந்தது. அதாவது 1971/72ஆம் ஆண்டில் ஒரு ஏக்கருக்கு 48.1 புசல்களாக விளங்கி 1972/73ஆம் ஆண்டில் 45.5 புசல்களாகக் குறைவுற்றது. 1973ஆம் ஆண்டு, சிறுபோக காலத்தில் விதைக்கப்பட்ட நிலப்பரப்பானது 1972/73ஆம் ஆண்டு பெரும்போக காலத்தில், நெற்பயிர்ச் செய்கைக்குட்படுத்தப்பட்ட நிலப்பரப்பிலும் பார்க்க கிட்டதட்ட அரைவாசியாகும். ஆனுல் பயிரழிவு குறைவாகக் காணப்பட்டமையினுல் கிட்டத்தட்ட 6 சதவீதத்தால் சிறிதளவு அதிகரித்த நிலப்பரப்பில் அறுவடை செய்யப்பட்டது. மேலும், 1973 ஆம் ஆண்டு சிறுபோக காலத்தில் அறுவடை செய்யப்பட்டநிலத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது, உற்பத்தியில் தொடர்பான அதிகரிப்பினைக் காட்டவில்லை. இதற்கு முன்னைய சிறுபோக காலத்திலும் பார்க்க விளைச்சலானது 4 சதவீதத்தால் குறைவடைந்திருந்தமை காரணமாகும். இச்சிறுபோக காலத்தில் வழங்கப்பட்ட பசளையானது முன்னைய ஆண்டிலும் கிட்டத்தட்ட இருமடங்காகிய போதிலும், விளைச்சலில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. உரம் கூடியளவிற்கு ஒதுக்கப்பட்டதினுல், முன்னைய ஆண்டிலும் பார்க்கச் சிறுபோகம் செழிப்பானதாக

அமைந்திருத்தல் வேண்டும் இவ்வாறு விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியானது, முக்கிய உள்ளீடுகள் பற்றுக்குறைவு போன்றதொழில்நுட்பக் காரணிகளால் ஏற்படவில்லை. ஆனல் வேறுவகையான குறைபாடுகளான அதாவது குறிப்பாக நெல்லுக்காக ஒதுக்கப்பட்ட உரம் வேறு பயிருக்கு பயன்படுத்தப்பட்டமையும் உரியகாலத்தில் பயிர் செய்வோருக்குக் கொடுகடன் வழங்கலில் காணப்பட்ட சில நிருவாகக் குறைபாடுகள் காணப்பட்டமையும் இவ்வீழ்ச்சிக்கு காரணமாகும்.

மேலும் 1972/73ஆம் ஆண்டு பெரும்போக காலத்திற்கும் 1973ஆம் ஆண்டு சிறுபோக காலத்திற்கும் முன்பு காணப்பட்ட குறைந்த அளவு வீத கொடுகடன் பயன்படுத்தப்பட்டு, அதன்பின்பு மாற்றியமைக்கப்பட்டது. மேலும் 1973/74 பெரும்போகத்தைத் தொடர்ந்து 1972/73 இற்குரிய பெரும்போக காலத்தில் ரூ 203 இலட்சமாக இருந்த கொடுகடன் பயன்பாடு, பெருமளவால் ரூ. 609 இலட்சமாக உயர்வுற்றது. இத்தகைய அதிகரிப்புக்கு ஒரு ஏக்கருக்கான சராசரி கொடுகடன் எல்லை, ரூ. 316 இலிருந்து ரூ. 385 ஆக உயர்த்தப்பட்டமையும், கடனைத் திருப்பிக் கொடுக்கத் தவறியோர் மறுமுறை சில கொடுகடன் வசதிகள் பெறுவதற்கு உரித்துடையவராகியமையும், கடனை நாடும் பயிர்செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்தமையும் காரணமாகும். 1973/74 ஆம் ஆண்டு பெரும்போக காலத்திற்கான பயிர்ச்செய்கைப் புள்ளிவிபரங்களில், கொடுகடன் பயன்பாட்டில் ஏற்பட்ட அதிகரிப்பின் முழுத்தாக்கம் பிரதிபலிக்கப்படும்.

1973ஆம் ஆண்டு முழுவதிற்குமான நெல் விளைச்சலானது முன்னைய ஆண்டினைப்போலவே 629 இலட்சம் புசல்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டில் நெற்சந்தைப்படுத்தும் சபையினல் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டது. அதாவது 1972ஆம் ஆண்டு மொத்த விளைச்சலில் 261 இலட்சம் புசல்கள் அல்லது 41·6 சதவீதமாகவும் 1973ஆம் ஆண்டில் 226 இலட்சம் புசல்கள் அல்லது 36 சத வீதமாகவும் காணப்பட்டது. கொள்வனவில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் நெல்லுக்கான கட்டில்லாச் சந்தை விலை அதிகரித்தமையும், சந்தை விலைக்கும் உத்தரவாத விலைக்கும் இடையில் அதிகரித்துச்செல்லும் வேறுபாடு காணப்பட்டமையும் காரணமாகும். மேலும் 1972ஆம் ஆண்டு நவம்பர் வரை நெல்லுக்கான உத்தரவாத விலை ஒரு புசலுக்கு ரூ 15/- ஆகவும், இதைத் தொடர்ந்து 1973ஆம் ஆண்டு பெப்புருவரி மாதத்தில் ஒரு புசலுக்கு ரூ. 18/- ஆகவும், 1973ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதத்தில் ரூ. 25 ஆகவும் உயர்த்தப்பட்டது. மேலும் 1973ஆம் ஆண்டு இறுதிக்காலத்தின்படி கட்டில்லாச் சந்தை விலைக்கும், உத்தரவாத விலைக்கும் இடையில் காணப்பட்ட வித்தியாசம் மேலும் பெரிதாகியதற்கு சான்றுண்டு. 1973ஆம் ஆண்டு ஒற்ரோபரில் விதிக்கப்பட்ட உத்தரவாத விலையானது, கட்டில்லாச் சந்தை விலையிலும் மிகவும் குறைவானதாகும் இதற்கு 1973ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதந்தொட்டு, பங்கீட்டரிசி அளவு குறைக்கப்பட்டமையும் அதனைத் தொடர்ந்து பங்கீட்டிற்கு வெளியிலான அரிசிக்குக் கேள்வி அதிகரித்தமையும் காரணமாக இருக்கலாம்.

நெற்சந்தையில் 1973ன் இறுதியில் தோன்றிய சூழ்நிலை நெற்சந்தைப்படுத்தும் சபையானது, தனக்குக் கூடுதலாக நெல் விற்பனவு செய்வதை உறுதிப்படுத்துவதற்கு தன்னுடையதொழிற்பாடுகளை மாற்றி அமைத்தல் வேண்டும்

என்பதனைக் காட்டுகிறது. மேலும், தற்போது நடைமுறையில் உள்ள கொள்வனவுத் திட்டத்தின்படி, நெல்லின் தரத்தைப் பொறுத்தவரையில் இச்சபையானது பல நிபந்தனைகளை விதித்துள்ளது. இவற்றில் கூறப்பட்ட நிபந்தனைகளோ, தேவைகளோ, பயிரிடுவோரில் இருந்து நேராகக் கொள்வனவு செய்கின்ற வியாபாரியினால் வற்புறுத்தப்படவில்லை. மேலும் இச்சபையானது தனிப்பட்ட வியாபாரியினால் வழங்கப்படுகின்ற சொடுகடன், முற்பணக் கொடுப்பனவுகள், போக்குவரத்து போன்ற வசதிகளை வழங்குவதில்லை. எனினும் சபையானது விவசாயியின் வீட்டிற்குச்சென்று நெல்லைக் கொள்வனவு செய்வதுடன் உடன் பணத்தையும் வழங்கின், வியாபாரிக்குத் தன் நெல்லை விற்கவேண்டிய நிலையை அகற்றலாம். இங்ஙனம் செய்ய முடியுமாயின் விவசாயி கொள்வனவு செய்யும் நிலையத்திற்கு நெல்லை எடுத்துச்செல்லவேண்டிய தேவையை நீக்குவதுடன், எடுத்துச்செல்லப்பட்ட நெல் குறிக்கப்பட்ட தரத்திற்கு அமையாவிடின் அந்நெல்லை நிராகரிக்கும் நிலையையும் அகற்றலாம். மேலும் பயிர்ச்செய்கைக் குழுவினதும், அல்லது புதிதாக ஏற்படுத்தப்பட்ட விலைதிறன் குழுக்களது சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் நெற்சந்தைப்படுத்தும் சபைக்கு, விவசாயி விளைச்சலில் ஒரு பகுதியினை விற்பனவு செய்யத் தூண்டலாம். மேலும் இக்குழுக்கள், உண்மையான உற்பத்தி பற்றி ஓரளவு நம்பத்தகுந்த தரவுகளைத் தமது பயிர்ச்செய்கைப் பதிவேடுகளில் கொண்டுள்ளமையால், விவசாயியின் தேவைகளுக்கு இடம் கொடுத்து மிகையாகவுள்ள விற்பனவுக்கான அளவினை மதிப்பிடலாம்.

இவ்வருட முடிவில் காணப்படுகின்ற 1 புசலுக்கு ரூ. 25/- ஆன உத்தரவாத விலையானது, தற்போது கிடைக்கப்பெறுகின்ற தரவுகளில் இருந்து பெற்ற உற்பத்திச் செலவுத் தொகைகளிலும்பார்க்க உயர்ந்ததாகும். 1973ற்கு முந்திய நிலையினை இது எடுத்துக்காட்டுகிறது மத்திய வங்கியினால் சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி 1966/67ஆம் ஆண்டு பெரும்போகத்தில், ஒரு புசலுக்கான சராசரி உற்பத்திச் செலவு ரூ. 11·17 சதமாகும். மேலும் இதனைத் தொடர்ந்து, 1972ஆம் ஆண்டு சிறுபோகத்திற்கான, கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தினால் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி, 5 மாவட்டங்களுக்கான உற்பத்திச் செலவானது 1 புசலுக்கு ரூ. 9.80 இலிருந்து ரூ. 14·43 ஆக வேறுபட்டுக் காணப்பட்டது. மேலும், 1973/74ஆம் ஆண்டு பெரும்போக காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெறப்பட்ட மதிப்பீட்டின்படி, அம்மாவட்டத்தின் உற்பத்திச்செலவு ஒரு புசலுக்கு ரூ. 22.50 ஆக உயர்ந்துள்ளது. எவ்வாறுயினும், இக்கணிப்பானது இத்தீவில் காணப்படுகின்ற ஏனைய நெல் உற்பத்தி செய்யும் மாவட்டங்களுக்கான உற்பத்திச்செலவினை எடுத்துக்காட்டாது. 1973ஆம் ஆண்டில் விலைகள் பொதுவாகப் பெருமளவால் மேலெழுந்துசென்று கொண்டிருக்கையில், நெல்லுற்பத்திக்கான முக்கிய உள்ளீடுகளான உரம், விவசாய இரசாயனப் பொருட்கள், எரிபொருள், இழுபொறிகளும் அவற்றின் உறுப்புக்கள், தொழில் ஆகியனவற்றிலும் குறிப்பிடத்தக்களவு உயர்வைக் காட்டின. மேலும் உள்ளீடுகளின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புகள் உற்பத்தியாளரின் எல்லை இலாபத்தினை அளவுக்குமீறிக் குறைத்துவிடவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக மிகவும் சரியானதும், உண்மைநிலையை எடுத்துக்காட்டக்கூடியதுமான தரவுகள் சேகரிக்கப்படவேண்டும்.

தற்காலிக மதிப்பீடுகளின்படி, உப-உணவுப்பயிர்களின் உற்பத்தியில் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டுளது. இவ்வாண்டு காலப்பகுதியில், உணவு

உற்பத்தி இயக்கம் உத்வேக நிலையடைந்ததையடுத்து, இப்பொருட்களைப் பயிர்செய்வதற்கான ஆர்வம் அதிகரித்தது. 1972/73ஆம் ஆண்டு காலத்தில் மரவள்ளி, சோளம், எள்ளு உள்ளடங்கிய 9 பயிர்வகைகள் பயிரிடப்பட்ட நிலங்கள் 68.5 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. எனினும், உப-உணவுப்பொருட்களுக்கான உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சியின் முழுத்தாக்கமும் வருட முடிவில் தெரியவரவில்லை. இதற்குக் காரணம், 1974ஆம் ஆண்டுத் தொடக்கத்திற்தான் பெருமளவு அறுவடை எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வளவு முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும், முக்கிய பயிர்களான சோகம், சோயா அவரை, பருப்புவகைகள் பயிரிடப்படுகின்ற நிலப்பரப்பு, குறைவாகக் காணப்படுவதனைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. மேலும் பெருமளவு நிலப்பரப்பில் இப்பயிர்கள் பயிரிடப்பட்டாற்தான் உற்பத்தியில் கணிசமான அதிகரிப்பினைப் பெறலாம்.

மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும், மீன் உணவு உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு கணிசமானளவாக இல்லை. தீவைச் சுற்றியுள்ள சமுத்திரமானது, எல்லையற்ற புரதம் நிறைந்த பொருட்களைக் கொண்டுள்ளது. இவை முற்றுமுழுதாகப் பயன்படுத்தப்படவேண்டியிருக்கிறது. 1973இல் மீன் உற்பத்தி 0.9 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்துள்ளது. இத்தகைய குறைவான சாதனைக்கு இயந்திர உறுப்புகளும் இயக்கு கருவிகளும் கிடையாமலிருந்தமையால் பெருமளவு இயந்திரப்படகுகளை இயக்கமுடியாத நிலை காரணமாகக் கூறப்பட்டுள்ளது. புதிய மீன்பிடிக்கருவிகளில் அதிகரித்த முதலீடுசெய்தபோதிலும், இதுகாலவரை இறக்குமதிசெய்யப்பட்ட கருவாட்டின் பெறுமதி ஏறக்குறைய ஆண்டொன்றிற்கு ரூ. 600 இலட்சமாகவிருக்கையில், பிடிக்கப்பட்ட மீனின் அளவு கணிசமானவளவால் அதிகரிக்கவில்லை.

வழமையாக, கணிசமானளவு வெளிநாட்டுச் செலாவணி தேவைப்படும் அளவிற்கு, விலை உயர்ந்த இறக்குமதிக் கருவிகளில் மீன்பிடிக் கைத்தொழில் தங்கியிருக்கவில்லை. மேலும், இன்றுவரை வழமையாகக் கையாளப்படும் முறைகளே பிடிக்கப்பட்ட மீன்களில் பெருந்தொகைக்குக் காரணமாக உள. 1973 ஆம் ஆண்டில், தனியார்துறையால் பிடிக்கப்பட்ட மீன்களின் தொகை 2,010 இலட்சம் இருத்தல்களாகும். இத்தொகையில் பெருமளவு வழக்கமான முறைகள் வாயிலாகவே பிடிக்கப்பட்டது. அதேநேரத்தில் பெருமளவுக்கு இயந்திர முறைகளைக் கையாண்டு பிடிக்கின்ற மீன்பிடிக் கூட்டுத்தாபனமானது மொத்த மீன்பிடிப்பில் 53 இலட்சம் இருத்தல்கள் அல்லது 2.1 சதவீதத்தைப் பிடித்தது. மக்கட்தொகை அதிகரிக்கும் இன்றைய வீதத்திற்கேற்ப, எல்லா உணவுப் பொருட்களையும் நிலத்திலிருந்து பெறுவது பெருமளவு கடினமாகும். பெருமளவு அதிகரித்துச்செல்லும் மக்கட்தொகை அழுக்கம் காரணமாக உணவுப் பயிர்கள் பயிரிடுவதற்கான நிலப்பரப்பு குறைந்தே காணப்படும். அத்துடன் உலகில் இருந்து எமக்குக் கிடைக்கும் உணவு வழங்கல்கள் கவலைதரும் முறையில் வீழ்ச்சியுறும் என எதிர்பார்க்கப்படுவதினால், நாடு தனது உணவுத் தேவைகளுக்காக சமுத்திரங்களையே முக்கிய துணைமூலமாகக் கொள்ளவேண்டியிருக்கிறது.

**பெருந்தோட்டத்துறை**

1965இல் 5,030 இலட்சம் இறாத்தல்கள்கொண்ட உச்ச எண்தொகையை அடைந்த தேயிலை உற்பத்தி தொடர்ந்து வீழ்ச்சியுற்றது. இப்போக்கு ஒரேயொரு தடவை 1968இல் மட்டும் மாற்றமுற்றது. முன்னைய ஆண்டுகளில் புதிய முதலீட்டங்களின் கணிசமானளவு அதிகரிப்பு மூலமாகவும் தொழில்நுட்ப அபிவிருத்தியின் மூலமாகவும் பயிரிடப்பட்ட பரப்பின் சிறியளவான அதிகரிப்பினாலும் உற்பத்தியின் அதிகரிப்பு பெறப்பட்டது. இதன் விளைவாக இலங்கை, அதிகரித்த அளவில் ஏற்றுமதிகளைத் தொடர்ந்து வைத்திருந்ததோடு உலகத்தேயிலை ஏற்றுமதிகளில் தனது பங்கை அதிகரிக்கவும் கூடியதாயிருந்தது. 1973இன் மொத்த உற்பத்தி 4,660 இலட்ச இறாத்தல்களாக விளங்கி, 50 இலட்ச இறாத்தல் அல்லது 1.1 சதவீதத்தாலான வீழ்ச்சியைக் காட்டியது. ஏற்றுமதிகள் 1972இன் 4,190 இலட்சம் இறாத்தலிலிருந்து 4,540 இலட்சம் இறாத்தலாக 1973இல் மீண்டும் உயர்வுற்றது. எனினும், 1971இன் 4,430 இலட்சம் இறாத்தல்கொண்ட எண்தொகையுடன் ஒப்பிடும்போது 1972இன் ஏற்றுமதிகள் குறைந்த மட்டத்தில் விளங்கின. தேயிலை ஏற்றுமதிகள் வாயிலான ரூபாப்பெறுகைகள் 1972இன் ரூ. 11,620 இலட்சத்திலிருந்து ரூ. 12,610 இலட்சமாக 1973இல் அதிகரித்திருப்பினும் சி. எ. உரிமைகள் பெறுமதிரீதியில் தொடர்புபடுத்திப்பார்க்கையில், வருவாய்கள் 1972இன் சி. எ. உ. 1,714 இலட்சத்திலிருந்து 1973இல் சி. எ. உ. 1,653 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தன. பின்னையது பன்னாட்டுச்சந்தையின் நாணய மீளிணைப்புகளாலும் இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கத்தாலும் ஏற்பட்டதாகும். தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளாக மலைநாட்டைப் பாதித்த வரட்சியும் உற்பத்தி வீழ்ச்சிக்கு ஏதுவாய் இருந்த காரணியாகும். உள்ளீடுகளின் விலை அதிகரிப்பு உற்பத்தியாளரின் எல்லை இலாபம் மிகக் கணிசமானளவிற்குப் பாதித்து முதலீட்டத்தைப் பாதுகாப்பதற்கான ஊக்கத்தைக் கெடுத்ததினால் மேற்கூறிய காரணியைப்போன்று இக்காரணியும் அதேயளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

பன்னாட்டுச்சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்ட பல்வகைப் பண்டங்கள், கோப்பி, கொக்கோ போன்ற குடிபானங்கள் ஆகியவற்றின் விலையில், ஏற்றத்தை ஏற்படுத்திய பண்டச்செழிப்பு தேயிலைமீது தன் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஆண்டு முழுதும் தேயிலையின் விலைஉயராது அதேநிலையில் தொடர்ந்திருந்தது. உற்பத்தியாளரின் எல்லை இலாபம் ஏற்கெனவே கவலைதரும்நிலையில் இருந்ததினால் உற்பத்திச்செலவையும் தாங்கவேண்டிய நிலைக்கு இக்கைத்தொழில் ஆளாகியுள்ளது. இக்காரணியுடன் சேர்த்து நிலச்சீர்திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் ஒரு தெளிவற்ற சூழ்நிலையும் தேயிலைக் கைத்தொழிலிற் காணப்பட்டது. இதன்விளைவாக வழமையாக தொழில்நுட்ப அபிவிருத்திமீது ஓர் உயர்ந்த மட்டத்தில் முதலீடுசெய்திருந்த சில தோட்டங்கள் தமது செலவு மட்டங்களைக் குறைத்தன. பராமரிப்புமீதான குறைந்த செலவுகள், குறைந்தளவான உரப்பாவனையிலும் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. 1971இன் 118,000 தொன்களிலிருந்து 1972இல் 99,000 தொன்களுக்கு வீழ்ச்சியடைந்திருந்த உர பாவனை 1973இல் 63,000 தொன்களாக பெருமளவில் குறைந்தது. தேயிலை விளைச்சல்

உரப்பயன்பாட்டிலேயே பெரிதளவு தங்கியிருப்பதனுல், இக்கைத்தொழில் உயர் மட்டமான உற்பத்தியை அடையவேண்டுமானுல், தொடர்ந்துவரும் உரப்பாவனையின் வீழ்ச்சி நீக்கப்படவேண்டும்.

தேயிலையின்மீது பன்னுட்டு அரசாங்கக்குழுவினுல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் இலங்கை 1973/74ஆம் ஆண்டிற்கு (1973 ஏப்பிறல் 1ஆந் திகதியிலிருந்து 1974 மாச்சு 31 வரை) 4,720 இலட்சம் இருத்தல்கொண்ட ஏற்றுமதி அனுமதிப்பங்கினைப் பெற்றிருந்தது. 1973/74 இற்கான இவ்வனுமதிப்பங்குக்குமாருக இதேகாலப்பகுதியில் தேயிலை உற்பத்தியானது 4,480 இலட்சம் இருத்தல்[1] மட்டுமே கொண்டு, மேலே குறித்த ஏற்றுமதி அனுமதிப்பங்கிலும்பார்க்க 240 இலட்சம் இருத்தல்கள்கொண்ட ஒரு குறைநிலையைக் காட்டியது. இக்குறைநிலையின்பேரிலான வெளிநாட்டுச்செலாவணி இழப்பு 1973இன் இருத்தலொன்றிற்கு ரூ. 2.77 கொண்ட சராசரி க. ஏ.பெ. விலையின்படி ரூ. 660 இலட்சமாகும்.

தேயிலைக் கைத்தொழில் உற்பத்தியின் மட்டத்தின் வீழ்ச்சிக்கு காரணமாய் இருந்த அதே காரணிகளுள் பல 1973இல் தெங்குக் கைத்தொழிலையும் பாதித்தன. 1972இல் நிலவிய கடும் வரட்சியும் உரப் பயன்பாட்டில் ஏற்பட்ட வீழ்ச்சியும் கடந்த இரு பத்தாண்டுகளில் ஆகக் குறைந்தளவு தெங்கு உற்பத்திக்கு வழிவகுத்தன. உற்பத்தி 1972இல் 29,630 இலட்சம் தேங்காய்களிலிருந்து 1973இல் 19,350 இலட்சம் காய்களுக்கு அல்லது 34.7 சதவீதத்தால் பெருமளவில் வீழ்ச்சியுற்றது. தெங்குக் கைத்தொழிலின் உர பாவனை 1972இன் 45,723 தொன்களிலிருந்து 1973இல் 30,539 தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதுவரை தெங்குச் சொத்துக்களின் பெரும்பகுதி தனிப்பட்டோரின் சொத்துரிமையின் கீழ் உள்ளனவாயும் பரந்த அடிப்படையில் அரசாங்கக் கூட்டு நிலையங்களால் உடமைப்படுத்தப்பட்டவையாகாததினுல், பெருமளவு தெங்கு நிலங்கள் நிலச் சீர்திருத்தத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. நிலச் சீர்திருத்தத் திட்டத்தினுல் உருவாக்கப்பட்ட தெளிவற்ற தன்மையான்து வழமையாக ஏற்றுமதி வழங்கல்களின் பிரதான பாகத்தை உற்பத்திசெய்யும் பெரிய தோட்டங்களின் பகுதிகள் ஓரளவு புறக்கணிக்கப்படும் நிலையை ஏற்படுத்தியது. 1972இன் உற்பத்தி மட்டம் 1973 இலும் பேணப்பட்டதாக ஊகிக்கப்படினும் 1973இன் பொருள் உற்பத்தியின் குறைக்கப்பட்ட மட்டத்தின் வாயிலாக 1973இன் விலைகளின்படியான வெளிநாட்டுசெலாவணி இழப்புகள் ரூ. 3,850 இலட்சமாகும். பின்னைய எண்தொகை, ஏனையஇறக்குமதிகள்[2]வாயிலான ரூ. 3,460 இலட்சத்தையும் இரத்தினக்கல் வாயிலான ரூ. 1,410 இலட்சத்தையும் அடக்கிய வழமையற்ற ஏற்றுமதிகள் வாயிலான ரூ. 4,870 இலட்சம்கொண்ட 1973இன் மொத்த வெளிநாட்டுச் செலாவணி

---

1. தேயிலைக் கட்டுப்பாட்டாளரின்படி 1973 ஏப்பிறல் தொடக்கம் 1974 பெப்புருவரி வரையான மொத்த தேயிலை உற்பத்தி 4,190 இலட்சம் இருததல்களாகும். 1974 மாச்சு மாதத்திற்கான உற்பத்தி எண்தொகை 290 இலட்சம் இருத்தல்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையை 1973இன் தொடர்பான மாத எண்தொகையுடன் ஒப்பிடுகையில் 70 இலட்சம் இருத்தல்கள்கொண்ட வீழ்ச்சியைக் காட்டியுள்ளது.
2. இவ்வேற்றுமதிகள், குறிப்பாகத் தயாரிக்கப்பட்ட பொருட்களில், இறக்குமதி உள்ளடக்கம் மிக உயர் நிலையில் இருந்தது. ஆகவே, தேறிய வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் கணிசமானளவு குறைந்தே காணப்பட்டன.

வருவாய்களுடன் ஒப்பிடப்படவேண்டியதாகும். வேறு சொற்களில் விளம்பின் தெங்கு வாயிலான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் இழப்பு, இரத்தினக்கல் தவிர்த்த ஏனைய வழமையற்ற ஏற்றுமதிவாயிலான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்ப் பெறுகைகளினாலும் எதிரீடுசெய்யப்படவில்லை.

தெங்கு விலைகளும் இவ்வாண்டில் உயர்மட்டங்களை அடைந்தன. ஆனால் உற்பத்தியில் ஏற்பட்ட குறை நிலையினால், இவ்வுயர்ந்த விலைகளின் பலனை கைத்தொழில் முற்றாக அடைய முடியவில்லை. கொப்பறாவின் உள்நாட்டுச் சந்தை விலை கண்டியொன்றிற்கு ரூ. 323ஐ அடையும்படி 64 சத வீதத்தால் உயர்ந்ததுடன், தேங்காய்எண்ணெயின் உள்நாட்டுச் சந்தைவிலை தொன்னொன்றிற்கு ரூ. 2,032ஐ அடையுமாறு 79சத வீதத்தால் உயர்ந்தது. இக்கைத்தொழில் வீழ்ச்சியுற்றிருப்பினும் எல்லாத் தெங்கு உப-உற்பத்திகளின் ஏற்றுமதி, ரூ. 804 இலட்சத்திற்கு உயர்வுற்று, சென்றாண்டின் மட்டத்திலும் பார்க்க ரூ. 169 இலட்சம் அதிகமாக விளங்கியது. முக்கியமாக வெளிநாட்டுச்செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டத்தின்மூலமாக ஏற்றுமதியாளருக்கு வழங்கப்பட்ட தூண்டுதல்கள் சிறிய தெங்கு உற்பத்தியின் வளர்ச்சியைப் பொறுத்தவரை நன்கு பயன் அளிக்கும் முறையில் அமைந்திருந்தன.

**(இ) கைத்தொழில்.**

இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட மிகப்பெருமளவு அதிகரிப்பு, இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களில் அதிகளவு தங்கியிருக்கும் நிலையிலிருந்த கைத்தொழிற் துறையினைப் பெருமளவு பாதித்தது. உள்ளீடுகளின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்புகளுடன் உற்பத்தி விலையில் பிரதிபலித்த அதிகரிப்புகளும் நுகர்வோர்மீது சுமத்தப்பட்டன. விலைக்கட்டுப்பாட்டின்கீழ் கைத்தொழிற் பொருட்களின் பெருந்தொகைகள் கொண்டுவரப்படாத காரணத்தால் இது சாத்தியமானது. இத்தகைய விலை அதிகரிப்பின் காரணமாக இவ்வாண்டறிக்கையில் நடைமுறை விலைகளில் தரப்பட்டுள்ள அரசாங்க, தனியார் கைத்தொழில் துறைகளுக்கான, கைத்தொழில் உற்பத்தி எண்தொகைகள், உண்மையில் உற்பத்தியின் உண்மை அதிகரிப்பின்மீது கூறப்பட்ட மிக் கூற்றொன்றாகும். உண்மையில் கூட்டப்பட்ட பெறுமதியின் அதிகரிப்பு எல்லையளவில்மட்டுமே இருந்த சில கைத்தொழில்களைப் பொறுத்தவரையில் குறிப்பாக உலோகம், இரசாயனத்தொகுதிகள், மிக அதிகரித்த மூலப்பொருட்களின் விலைகளால் மட்டுமன்றி மூலப்பொருட்களை போதியளவு பெறுவதிலுமுள்ள இடர்ப்பாடுகளை எதிர்நோக்கியுள்ளன. சில தொகுதிகளைப் பொறுத்தவரை மூலப் பொருட்களில் ஒருசில அளவையே பெறத்தக்க முறையில் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கீடுகள் குறைந்தளவில் இருந்தமையால் விலை உயர்வு காரணமாக பொருட்களைப் பெறுவதைக் கைத்தொழிலாளர்கள் தவிர்த்துள்ளனர்.

அரசாங்கத்துறை கைத்தொழில்கள் சம்பந்தப்பட்டவரையில் அவர்களிடமிருந்து அண்மைக்காலத் தரவுகளைப்பெறுவதில் மத்திய வங்கி தொடர்ந்து இடர்ப்பாட்டினையே தாங்கவேண்டியிருக்கின்றது. இது அனைத்துமடக்கிய ஆய்வொன்றினைசெய்வதைத் தடைசெய்துள்ளது. அரசாங்கத் தொழில் முயற்சிகள் என்ற பிரிவு, மத்திய வங்கியினால் அனுப்பப்பட்ட கேள்விக்கொத்துக்களுக்குப் பல முக்கிய கூட்டுத்தாபனங்கள் பதிலளிக்கவில்லையென்பதைக் காட்டுகின்றது.

கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் நடைமுறைவிலைகளின் உற்பத்தியில் அதிகரிப்பினைக் காட்டியிருப்பினும் உண்மை நியதிகளின்படி அது மாறுகவே உள்ளது. 1972இல் ஏற்பட்ட 6.3 சதவீத அதிகரிப்புக்கு மாருக 1973இல் வீழ்ச்சி 2.1 சதவீதமாகும். அநேக முக்கிய கூட்டுத்தாபனங்கள் அதிகரித்த ஏற்றுமதி விலைகளாலும் மூலப்பொருட்களின் தொடர்பான தட்டுப்பாட்டினுலும் பெரிதும் பாதிக்கப்பட்டன. சில கூட்டுத்தாபனங்கள் இயந்திரப் பழுதினுலும், தொழிலாளர் தகராறுகளாலும் தம் தொழிற்பாடுகளைத் தடைசெய்ய வேண்டியிருந்தன. 1973இல் முன்னைய ஆண்டுகளைப்போலவே கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களின் இயலளவுப் பயன்பாடு மிகக் குறைவானதாகும். உதாரணமாக, டயர், இரும்பு, தோல், கூட்டுத்தாபனங்களும், பாற்சபையும் இயலளவுப் பயன்பாட்டில் மிகக்குறைந்த அளவினைக் கொண்டிருந்தபோது உருக்குக் கூட்டுத்தாபனம் சேர்க்கப்பட்ட இயலளவில் 40 சதவீதத்தை மட்டுமே பயன்படுத்தியது. குறைந்தளவு இயலளவுப் பயன்பாட்டுடன், இயலளவின்கீழ் சில கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் தொழிற்பட்டதினுல் பொருட்களில் பற்ருக்குறை காணப்பட்டது. இதற்கு எடுத்துக்காட்டாக டயர், சீமெந்துக், கூட்டுத்தாபனங்களும் பாற்சபையும் உள்ளன.

கூட்டுத்தாபனத் துறையின் பொதுப்படையான செயலாற்றம் பொருளாதாரத்துறையில் இவை தனித்து வலுவோடு இயங்கும் ஆற்றலை அடையவில்லை என்பதைக் காட்டுகிறது. இது முதலீடுசெய்யப்பட்ட மூலதனத்தின்மீது பெறும் குறைந்தவீத வருவாயில் ஓரளவிற்கு பிரதிபலிக்கப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனங்களின் நிர்வாகம், அமைப்பு, தொழிற்பாடுகள் ஆகியனவற்றிற் தொடக்கத்தில் இருந்தே காணப்பட்ட குறைபாடுகள் இன்னமும் திருத்தப்படவில்லை, இவை மேலதிக இயந்திர இயலளவு, மேலதிக வேலைப்படை, முன்பே திட்டமிடாத தன்மை, திறமையற்ற முகாமை, தொழிற்சாலையில் ஏற்படும் மிதமிஞ்சிய செலவு ஆகியவற்றை உள்ளடக்கும். இவற்றைத் தவிர, வேலைப்படையில் ஏற்கெனவே மிகை இருக்கும்போது தொடர்ந்தும் தொழிலாளர்களை நியமிப்பதனுலும், தெளிவற்ற திட்டமிடப்படாத முகாமை முடிவுகளினுலும் சில கூட்டுத்தாபனங்களில் தொடர்ந்தும் இக்குறைபாடுகள் காணப்பட்டன.

அண்மைக்காலங்களில் அரசாங்க கூட்டுத்தாபனங்களில் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றேற்பட்டுள்ளது. 1973இல் பதின்மூன்று புதிய கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்பட்டன. பல்வகைப்பட்ட செயலாக்கல்களை கையேற்றத்தக்க புதிய கூட்டுத்தாபனங்களை உருவாக்கும் இப்போக்கின் நிலையில் கவனிக்கப்படத்தக்க கேள்வி, இந்நாட்டில் தற்போது கிடைக்கத்தக்க குறைந்தளவு மூலவளங்களேயாகும். அதிகளவிலான எண்ணிக்கை கொண்ட கூட்டுத்தாபனங்களை வெற்றிகரமாக கொண்டு நடாத்த நிர்வாகத்திறன், மூலதனம், தேர்ந்தறிவு, சந்தைகள் தொழில்நுட்பம் பற்றிய அறிவுபோன்ற பல்வகையான மூலவளங்கள் தேவைப்படுகின்றன. அரசாங்க நிறுவனங்களின் திறமையான தொழிற்பாடுகளுக்கான இத்தகைய ஆரம்ப தேவைகள் போதுமானளவு விகிதத்தில் கிடைக்கப்படுகின்றது என்பவற்றிற்கு போதிய சான்றுகள் இல்லை.

கூட்டுத்தாபனங்களின் தொழிற்பாடு, அவை பொருளியல் அடிப்படையில் தரக்கூடிய வருவாய் ஆகியவற்றைப் பற்றி விரிவான அடிப்படையில் ஆய்வு செய்தால் தான் அவற்றின் குறைபாடுகளின் உட்தன்மை பற்றி உணரத்தக்க தாய் இருக்கும். இறுதியில் குறிக்கப்பட்ட பண்புகள் பற்றி அறிவும், தகவலும் கிடைக்கப்பட்ட நிலையிற்ருன் இனி உருவாக்கப்படவிருக்கும் கூட்டுத்தாபனங்கள் செயற்பாடுகள் பற்றி அறியத் துணைநிற்கும்.

**சென்மதி நிலுவையும் செலாவணி வீதமும்.**

வெளிநாட்டுச் செலாவணியைப் பொறுத்தவரையில், அதிகரித்துக் காணப் படும் ஏற்றுமதி வருவாய்களை, 1970 க்குப்பின் ஏனைய நாணயங்களிலும் பார்க்க பெருமளவு நிலையாய் உள்ள சிறப்பு எடுப்பனவு உரிமை நாணயங்களில் வைத்துக் கணித்தாற்ருன் ஏற்றுமதிகள் பெற்ற இலாபங்களின் உண்மை இயல் பினை உணரக்கூடியதாய் இருக்கும். இச்சூழ்நிலையில் இது மிகவும் பொருத்த மாய் இருக்கின்றது. காரணம், எந்த ஆண்டுகளிலும் பார்க்க 1973 இல் தான் ரூபாய் நியதிகளில் வெளிநாட்டு வருவாய்கள் கணிசமானளவால் அதிகரித்துள் ளன. கீழேயுள்ள அட்டவணை இலங்கையின் ஏற்றுமதி அளவுகளையும் வருவாய் களையும், ரூபாய்களிலும் சிறப்பு எடுப்பனவு உரிமைகளிலும் தருகின்றது.

**அட்டவணை 1 – 5**

**இலங்கையின் ஏற்றுமதி அளவுகளும் வருவாய்களும்.**

| | தேயிலை | | | இறப்பர் | | | மூன்று முக்கிய தெங்கு உற்பத்திகள் | | | மொத்த ஏற்றுமதி* | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பெறுமதி | | | பெறுமதி | | | பெறுமதி | | பெறுமதி | |
| | பத்து இலட்சம் இறாத்தல் | பத்து இலட். | சி.எ.உ ப.இ. | பத்து இலட்சம் இறாத்தல் | பத்து இலட். | சி.எ.உ. ப.இ. | பத்து இலட்சம் விதைகள் | பத்து இலட். ரூபா | சி.எ.உ ப.இ. | பத்து இலட். ரூபா | சி.எ.உ ப.இ. |
| 1963 ... | 455.9 | 1140 | 239.5 | 209.5 | 257 | 54.0 | 1208 | 198 | 41.6 | 1731 | 363.7 |
| 1964 .. | 455.7 | 1142 | 239.9 | 253.2 | 290 | 60.9 | 1681 | 273 | 57.4 | 1876 | 394.1 |
| 1965 ... | 494.6 | 1210 | 254.2 | 266.8 | 304 | 63.9 | 1270 | 275 | 57.8 | 1949 | 409.5 |
| 1966 ... | 441.3 | 1027 | 215.8 | 298.4 | 337 | 70.8 | 1017 | 196 | 41.2 | 1700 | 357.1 |
| 1967 ... | 477.7 | 1061 | 222.9 | 290.9 | 282 | 59.2 | 940 | 167 | 35.1 | 1690 | 355.0 |
| 1968 ... | 460.2 | 1162 | 195.4 | 328.3 | 331 | 55.6 | 1096 | 331 | 55.6 | 2035 | 342.0 |
| 1969 ... | 444.5 | 1062 | 178.5 | 314.8 | 431 | 72.4 | 896 | 221 | 37.1 | 1916 | 322.0 |
| 1970 ... | 459.7 | 1120 | 188.2 | 354.2 | 440 | 73.9 | 874 | 237 | 39.8 | 2033 | 341.5 |
| 1971 ... | 443.1 | 1144 | 192.2 | 285.2 | 307 | 51.6 | 1010 | 276 | 46.4 | 1947 | 327.1 |
| 1972 ... | 419.3 | 1162 | 171.4 | 285.7 | 265 | 39.1 | 1248 | 262 | 38.6 | 2009 | 296.3 |
| 1973 ... | 453.6 | 1261 | 165.3 | 354.4 | 592 | 77.6 | 417 | 142 | 18.6 | 2617 | 343.0 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

* மீள ஏற்றுமதி

நாணய விகிதம் — 1950 - 67 : 1 சிஎஉ = ரூ. 4.76 (1967 நவம்பரில் ரூபாய் மதிப்பிறக்கம் செய்யப்பட்டது)
1968 - 71 : 1 சிஎஉ = ரூ. 5.95
1972 : 1 சிஎஉ = ரூ. 6.78
1973 : 1 சிஎஉ = ரூ. 7.63

தேயிலையைப் பொறுத்தவரை 1973 இல் ஏற்றுமதியளவு 343 இலட்ச இருத்தல்களால் அதிகரிக்க ஏற்றுமதி வருவாய்கள் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் அடிப்படையில் 61 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன. எனினும் ரூபாய் அடிப்படையில் ரூபாய் 990 இலட்ச அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே தேயிலை ஏற்றுமதி அளவு அதிகரித்த நிலையிலும் உண்மையான நியதிகளில் பார்க்கையில் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் உண்மையில் வீழ்ச்சியுற்றுள்ளன. கடந்த பத்தாண்டுகளிற்கூட இதே போக்கு நிலவியது. எடுத்துக்காட்டாக 1963 இல் இலங்கை 4,560 இலட்ச இருத்தல்கள் கொண்ட தேயிலையை ஏற்றுமதி செய்து சிறப்பு எடுப்பனவு உரிமைகளில் ரூபா2395இலட்ச வருவாயைப் பெற அதே வேளையில் 1973 இல் ஏறக்குறைய அதே அளவான 4,540 இலட்ச இருத்தல்களை ஏற்றுமதி செய்து சிறப்பு எடுப்பனவு உரிமைகளில் ஆக 1,653 இலட்சத்தையே பெற்று வருவாயில் 31 சதவீத வீழ்ச்சியைக் காட்டியுள்ளது. 1973 இல் றப்பரில் இருந்து பெற்ற சிறப்பெடுப்பனவு வருவாய்கள் 385 இலட்சமாக அல்லது ஏறக்குறைய 98 சதவீதத்தால் அதிகரிக்க ஏற்றுமதியளவு 24 சதவீதத்தால் அதிகரித்தது. மறுபுறம் ரூபாய் வரவுகள் 23 சதவீதத்தால் அதிகரித்தன. எல்லா முக்கிய உற்பத்திகளிலும் றப்பர் ஒன்று தான் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புகளைக் காட்டியது. இதற்குக் காரணம் 1973 இல் இதனின் விலைகள் 80 சதவீதத்தால் உயர்ந்தமையினுலேயேயாகும். எல்லா முக்கிய ஏற்றுமதிகளையும் கணக்கில் எடுக்கின் ரூபாயின் படிப்படி மதிப்பிறக்கத்தின் தாக்கம் தெளிவாகத் தெரிகிறது. 1963 இல் இவ்வேற்றுமதிகளில் இருந்துபெற்ற வெளிநாட்டு வருவாய்கள் சிறப்பு எடுப்பனவு உரிமைகளில் 3637 இலட்சமாக அல்லது ரூபாய் 17310 இலட்சமாக விளங்கியது. எனினும் 1973 இல் ரூபாய் வரவுகள் 26170 இலட்சமாக உயர்ந்த நிலையிலும் உண்மை நியதிகளின்படி இவற்றின் சமமான வருவாய்கள் சிறப்பு எடுப்பனவு உரிமைகளில் 3430 இலட்சமாகும் இது 1963 இன் வெளிநாட்டு வருவாய்களிலும் பார்க்கக்குறைவுடையதாகும்

1967இல் ரூபாய் மதிப்பிறக்கம் செய்தபின் ஏற்றுமதிகளில் இருந்து பெற்ற ரூபாய் வருவாய்கள் 1967இல் ரூபாய் 16,900 இலட்சமாகவிருந்து 1968இல் ரூ. 20,350 இலட்சமாக உயர்ந்து, சி. எ. உ. நியதிகளின்படி பெற்ற வருவாய்கள் சி எ. உரிமைகளில் ரூபாய் 3,550 இலட்சமாகவிருந்து சி. எ உரிமைகளில் 3,420 இலட்சமாக வீழ்ச்சியுற்றமை கவனத்தை ஈர்க்கவேண்டிய விடயமாகும். ரூபாய் மதிப்பிறக்கத்தின் நோக்கமே வெளிநாட்டுச்செலாவணி வருவாய்களைக் கூட்டுவதேயாகும். ஆகவே 1967இல் செய்யப்பட்ட மதிப்பிறக்கம் கூடிய தொகை வெளிநாட்டுச் செலாவணியைக்கொண்டு வந்திருக்கவேண்டும். மதிப்பிறக்கத்திற்கு முன்புபெற்ற சி. எ. உரிமைகளில் 3,550 இலட்சம் கொண்ட வெளிநாட்டுச்செலாவணி வருவாய்கள் இதன்பின் கிடைக்கவில்லை. பண்டப்பொருட்கள் மிக உச்சநிலையில் இருந்த 1973இல்கூட இது கிடைக்கவில்லை.

கடந்த சில ஆண்டுகளாக[1] இலங்கை ரூபாயின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியுற்றதன் காரணமாக இலங்கையின் ஏற்றுமதி வருவாய்களின் வெளிநாட்டுச்செலாவணியில் உண்மைநிலையைக் காணமுடியவில்லை. 1967இற்குமுன் ரூபாயின் செலாவணிவீதம் பல ஆண்டுகளுக்கு நிலையாக இருந்தது. ஆனால் அதன்பின் செலாவணி வீதங்களின் அமைப்பு அடிக்கடி மாற்றத்திற்குள்ளாகியுள்ளது. இது இறக்குமதி ஏற்றுமதி விலைகளையும் பாதித்துள்ளது.

ஏற்றுமதிகள் அமைப்பில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருப்பதே 1973இன் ஒரு முக்கிய பண்பாய் விளங்குகிறது. பல பத்தாண்டுகளாக இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்தில் மூன்று முதன்மைப் பொருட்களாகிய தேயிலை, றப்பர், தெங்கு ஆகியவை முக்கிய இடம்வகித்து ஏற்றுமதி வருவாய்களுக்கு 90 சதவீதத்திற்கு வகைகூறின. ஏற்றுமதி வருவாய் இவ்வேற்றுமதிப் பண்டங்களில் பெருமளவு தங்கியிருந்த தன்மை பன்னாட்டுச் சந்தையின் விலைகளின் பாதகமான போக்கிற்கு இவை ஆளாகவேண்டியநிலையை ஏற்படுத்தியது 1973 வரை ஏற்றுமதி அமைப்பில் பன்முகப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டதில் குறிப்பிடத்தக்க வெற்றி காணமுடியவில்லை. எனினும் 1973 இல் முன்னைய போக்கிற்கமைய வழமையாக ஏற்றுமதி செய்யப்படாத சில ஏற்றுமதிகள் நாட்டின் ஏற்றுமதி வர்த்தகத்தில் முக்கிய இடம் வகிக்கும் பண்டங்களாக தெளிவான முறையில் உருவெடுத்தன. சட்டவாயிலாக இரத்தினக்கற்களின் ஏற்றுமதி பெருமளவால் உயர்ச்சியுற்றதே இதற்கு முக்கிய காரணமாய் விளங்குகிறது. இத்துறையைப் பொறுத்தவரையில் மீளாய்விற்குரிய ஆண்டு, மரபுவழியில்நின்று தெளிவானமுறையில் மாறுபட்டு விளங்குகிறது பதிவுசெய்யப்பட்ட செலாவணி அடிப்படையிற் பார்க்கையில் மரபுவழியல்லா ஏற்றுமதி

---

1. 1949 இற்குப் பின் இலங்கை ரூபாயின் செலாவணி வீத மாற்றம் 1967 நவெம்பரில் ஏற்பட்டது. இவ்வாண்டில் பவுண்டு ஸ்ரேலிங் 14 சத வீதத்தால் மதிப்பிறக்கம் செய்யப்பட்டதையடுத்து இலங்கை ரூபாய் 20 சத வீதத்தால் மதிப்பிறக்கம் செய்யப்பட்டது. ஸ்ரேலிங் நியதிகளின்படி ரூபாவின் நடைமுறை மதிப்பிறக்கம் ஏறக்குறைய 7 சத வீதமாகும். 1968 மேயின் வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டத்தோடு இரண்டு செலாவணி வீத அமைப்பு உருவாக்கப்பட்டது. உத்தியோக வீதம் மாற்றமுறாதிருந்தது. அதே வேளையில் வெ. செ. உ. சா. வீதம் மதிப்பிறக்க வீதமாகவே இருந்தது. முதலில் வெ. செ. உ. சா. வீதம் 44 சத வீதமாக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் உத்தியோக வீதத்துடன் பார்க்கையில் ரூபாவின் மதிப்பிறக்க வீதம் 31 சத வீதமாக விளங்கியது. 1969 யூலையில் இருந்து வெ. செ. உ. சான்றிதழின் விலை 44 சத வீதத்தில் இருந்து 55 சத வீதத்திற்கு உயர்ந்தது. இது 1972 நவெம்பரில் 65 சத வீதத்திற்கு மேலும் உயர்ந்தது. சான்றிதழ் சந்தையில் ஏற்பட்ட மொத்த மதிப்பிறக்கம் 39 சத வீதமாக விளங்கியது. 1971 நவெம்பரில் உத்தியோக வீதத்தை அமைப்பதற்கு சம பெறுமதியை ஒரு அடிப்படையாக வைப்பதைக் கைவிடுவதென்று முடிவுசெய்யப்பட்டதோடு ஐ. அ. டொலருடன் ரூபாவை இணைப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது. இந்நடவடிக்கை சிறப்பு எடுப்பனவு உரிமைகளுக்கு எதிராக இலங்கை ரூபாய் மதிப்பிறக்கம் இறங்கவும் பவுண்ட் ஸ்ரேலிங்கிற்கு எதிராக உயரவும் வழிவகுத்தது. 1972 யூனில் பவுண்ட் ஸ்ரேலிங்கை மிதக்கவிட்டதோடு ஐக்கிய அமெரிக்காவின் டொலருடன் இலங்கை தன் தொடர்பை அறுத்துக்கொண்டு மீண்டும் பவுண்ட் ஸ்ரேலிங்குடன் £1 = ரூ. 15.60 என்ற நிலையில் இணைந்தது. 1972 மாச்சில் இந்த வீதமே நடைமுறையில் இருந்தது. இதன் விளைவாக பவுண்ட் ஸ்ரேலிங் நியதிகள்ன்படி ரூபாயின் மதிப்பு இறங்க 1967 நவெம்பர் மட்டத்திலிருந்து ஐ. அ. டொலரின் மதிப்பும் இறங்கியது. 1972 முடிவில் செலாவணிச் சந்தைகளில் பவுண்ட் ஸ்ரேலிங்கின் மதிப்பு இறங்கியதன் காரணமாக ரூபாயின் பெறுமதி மேலும் வீழ்சசியுற்றது. 1973 முழுதும் ரூபாய் பவுண்ட் ஸ்ரேலிங் வீதம் மாற்றமுறாது இருந்தது. ஆனால் 1973 பெப்புருவரியில் ஐ. அ. டொலர் மதிப்பிறக்கம் செய்யப்பட்டதையடுத்து டொலரின் நியதிகளில் ரூபாவின் பெறுமதி உயர்வுற்றது. ஐக்கிய அமெரிக்க டொலரை வலி குன்றச் செய்ததனால் ரூபாவின் பெறுமதி வலுப் பெற்றது. 1973 ஒகத்தில் பவுண்ட் ஸ்ரேலிங் வலி குன்றியதை அடுத்து ரூபாவின்பெறுமதி மீண்டும வீழ்ச்சியுறத்தொடங்கியது.

கள் 1973இன் மொத்த ஏற்றுமதிகளில் 25.6 சதவீதத்திற்கு வகைகூறின. அதேவேளையில் மரபுவழி ஏற்றுமதிகளின் பங்கு 74.4 சதவீதத்திற்கு என்றுமில்லாத அளவிற்கு வீழ்ச்சியுற்றன. தெங்கு உற்பத்தியில் வழக்கத்திற்கு மாருக குறைந்த வருவாய்கள் பெற்றதே இவ்விறுதி எண்தொகைக்குக் காரணம் என்று ஓரளவு விளக்கப்படினும் மரபுவழியல்லா ஏற்றுமதிகளில்பெற்ற மொத்த வருவாய்கள், ஏற்றுமதிகள் பன்முகப்படுத்தும் முறையில் முன்னேறியுள்ளன என்பதற்குத் தெளிவான அறிகுறிகளாக விளங்குகின்றன.

புதிய ஏற்றுமதி முறையின் வெற்றிக்கு ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கு எடுத்த உறுதியான செயல்முறைகளையே முக்கிய காரணமாகக் கூறலாம். மாற்றல் கணக்குத் திட்டத்தால் அளிக்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் இத்துறையில் விரைவான மாற்றத்தைக்கொண்டுவந்தன. ஏற்றுமதியாளர்கள், வியாபாரிகள், மற்றும் ஏனையோர் சில இறக்குமதிப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும், பயணத்திற்கும் ஏனைய செலவிற்கும் சட்டமுறையாக வெளிநாட்டுச் செலாவணியை வைத்திருக்க இயலாமைக்கும் காரணம் முன்னைய ஆண்டுகளில் வரவேண்டிய செலாவணி உள்நோக்கி வராமையேயாகும். மாற்றற் கணக்குத் திட்டத்தின் தொழிற்பாடு இத்தேவையை ஓரளவுக்குப்பூர்த்தி செய்துள்ளது. இத்திட்டம் வெளிநாட்டுச் செலாவணியைப் பயன்படுத்துவதை உள்ளடக்கும் முறையில் படிப்படியாக இதன் பயன்பாடுகள் விரிவடைவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. மாற்றற் கணக்குகளுக்கு உரித்துடைய ஆட்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துச் சென்றதிலிருந்தும், இக்கணக்குகளில் வைப்புச்செய்யப்பட்ட பணத்தொகையிலிருந்தும் இத்திட்டத்தின் வெற்றியைக் காணக்கூடியதாயிருக்கின்றது.

இவ்வறிக்கையின் வெவ்வேறு பிரிவுகளில் தரப்பட்டுள்ள தரவுகள் 1973 இல் நுகர்வுச் செலவு உயர்வுற்றுள்ளதென்றும், இதற்கு விலை அதிகரிப்புகள் ஓரளவிற்கு மட்டுமே காரணமாகுமென்றும் காட்டுகின்றன. கோதுமை மா போன்ற சில விடயங்களைப் பொறுத்தவரை அளவிலும் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டது. வர்த்தக மாற்று விகிதங்களில் காட்டப்பட்டுள்ளவாறு இறக்குமதி விலைகள் ஏற்றுமதி விலைகளிலும் பார்க்க துரிதமாக உயர்வுற்றுள்ளன. இதனுல் இறக்குமதி ஆற்றல் உண்மையில் தேக்கமுற்றது. பிற்கூறப்பட்ட நிலை, நுகர்வு இறக்குமதிகளின் பங்கைக் குறைத்து அதேசமயம் அபிவிருத்திக்கான அடிப்படைத் தேவைகளை அளிக்கும்முகமாக இடைநிலை, முதலீட்டுப் பொருட்களின் பங்கை அதிகரிப்பதற்கான பொதுப்படை வழிமுறைத் தேவையை வலியுறுத்துகின்றது. நுகர்வுப் பொருட்களிலும் பார்க்க இடைநிலை முதலீட்டப் பொருட்களைப் பொறுத்தவரை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களையும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களையும் பதிலீடு செய்யத்தக்க ஆற்றல் வாய்ந்த பொருட்கள் மிகக் குறைவென்பது எல்லாவற்றிலும் பார்க்க மிக முக்கியமானது. இக்குறைந்த அளவிலுள்ள பொருள் வளங்கள் பெருமளவிற்கு நுகர்வு இறக்குமதிகளை நிதி உதவுவதற்காகப் பயன்படுத்தப்பட்டமையால் 1973இல் காணப்பட்ட சென்

மதி நிலுவை நிலை இவற்றின் வாய்ப்புக்களை மேலும் பின்போட்டன[1]. இச்சூழ்நிலையிலேயே ஒற்ருேபர் 1ஆந் திகதி வழிமுறைகளின் முக்கியத்துவத்தை மதிப்பிடல்வேண்டும். இவ்வழிமுறைகள் தாமதிக்கப்பட்ட போதிலும், கொள்கையளவில் இவை பொதுப்படையான பொருளாதாரக்கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கொண்டுவந்தன. விரிவான அடிப்படையில் பார்க்கையில், ஒற்ருேபர் 1 ஆந் திகதிய வழிமுறைகளில் குறிக்கோள், நுகர்வோரை இன்றியமையாத பொருட்களின் அதிகரித்துச்செல்லும் விலைகளைத்தாங்கச் செய்வதும் அதே சமயம் சென்ற சில ஆண்டுகளாக வலுவிழந்துள்ள தேயிலைக் கைத்தொழில் போன்ற ஏற்றுமதித் துறைகளுக்கு உதவியளிப்பதுமேயாகும். இவ்வழிமுறைகளையும் இவற்றையடுத்து உருவாகும் ஏனைய வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தப்படும்போது உணவு இறக்குமதியால் ஏற்படும் வெளிநாட்டுச் செலாவணி குறைக்கப்படுவதோடு உள்நாட்டு உற்பத்தியும் ஊக்குவிக்கப்படும்.

மேலே குறித்த விடயத்தையொட்டிப் பார்க்கையில் நாட்டிற்கு நன்மை விளைவிக்கும் முறையில் இறக்குமதி ஆற்றலுக்கும் வெளிநாட்டு இருப்புச்சொத்துக்களைக் கையாள்வதற்குமிடையில் ஒரு நெருங்கிய உறவு இருப்பது தெரிய வருகிறது. இலங்கைக்குக் கிடைக்கத்தக்க வெளிநாட்டுச் செலாவணி மூலவளங்கள் மிகக் குறைவாகவே இருப்பதனுல் இன்றியமையாத உணவுப்பொருட்களாகிய அரிசி, மா, சீனி ஆகிய கையிருப்புகளைப் போதியளவு எப்பொழுதும் இந்நாடு தன் வசம் வைத்திருக்க முடியாமல் இருக்கிறது. உடனடி வருங்காலத் தேவைக்குப் போதுமான பொருட்களை அன்று நிலவும் விலைகளில் கொள்வனவு செய்வதே இந்நாட்டின் இன்றைய நடைமுறைக்கொள்கையாக இருக்கிறது. வருங்காலத்திற்காக கொள்வனவு செய்யும்முறை மிக அருமையாகவேயுள்ளது. பண்டப்பொருட்களின் விலைகள்மிகப் பெருமளவால் அதிகரித்ததோடு, தொடர்ச்சியாக உயர்மட்டத்தில் தெளிவற்றநிலையில் விலைகள் தளம்புகின்ற இச்சூழ்நிலையில் குறைந்த விலைகளில் கொள்வனவு செய்வதை உறுதிப்படுத்த முடியாவிடில் வெளிநாட்டுச்செலாவணியில் உண்மையில் இழப்பு ஏற்படுவதற்கேஇன்று கடைப்பிடிக்கப்படும் வழிமுறைகள் வழிவகுக்கும். இன்று நிலவும் விலைகள், சந்தை அமைப்புகள், அத்துடன் பன்னுட்டுச் சந்தைகள், விலைகள் ஆகியனவற்றின் எதிர்பார்க்கத்தக்க போக்குகள்பற்றித் தொடர்ச்சியான ஆய்வு இருந்தாற்தான் குறைந்த விலைகளில் கிடைக்கத்தக்க வெளிநாட்டுச்செலாவணியைக்கொண்டு ஆகக்கூடிய இறக்குமதிகளைப் பெறமுடியும். பன்னுட்டுப் பண்டப்பொருட்களினது விலைகளின் ஒருசில புதுப்போக்குகளைக்கொண்டு ஆய்வினை நடாத்துவதோ அல்லது முன்பு விலைகள் ஏறியிருப்பதனுல் விலைகள் தொடர்ந்தும் உயரும் என்று எதிர்பார்த்து கொள்வனவுகளை மேற்கொள்வதோ போதிய வழிமுறையாக அமையமுடியாது. நாட்டின் வெளிநாட்டுச்செலாவணி மூலவளங்களைப் பயன்படுத்துவதற்கு பன்னுட்டுச்சந்தைகள்பற்றி நுண்ணிய அறிவு தேவை. மாருக, தெளிவாகத் திட்டமிடாது மேலெழுந்தநிலையில் முடிவுகள்

---

1.

| | மொத்த உணவு இறக்குமதிகள் (பதது இலட்சம் ரூபாய்களில்) | மொத்த இறக்குமதிகளின் சத வீதம் |
|---|---|---|
| 1971 | 916 | 46·1 |
| 1972 | 960 | 46.5 |
| 1973 | 1308 | 48.2 |

எடுப்பது நாட்டிற்கு நிலையான நன்மையை அளிக்காது. நாட்டின் வெளி நாட்டு மூலவளங்களை நன்முறையில் பயன்படுத்தும்முறையில் ஏற்ற முடிவுகளை எடுப்பது, வெளிநாட்டுச்செலாவணி வரவு செலவுத் திட்டக்குழுவிற்குள்ள ஒரு முக்கிய பணியாகும்.

நாட்டின் இருபுடை வர்த்தகக் கணக்குகளை நிர்வகிக்கும் துறையைப் பொறுத்தவரையிற்கூட மேலே குறிக்கப்பட்ட அதேயளவு முக்கியத்துவம் உண்டு 1973இன் முடிவில் இக்கணக்குகளில் இலங்கையின் சார்பில் ரூ. 548 இலட்சம் இருந்தது. கிடைக்கத்தக்க மூலவளங்கள் மிகக் குறைவாக இருக் கும் இச்சூழ்நிலையில், குறிப்பாக உணவுப்பொருட்களுக்கு உடனடியாக கொடுப் பனவு செய்வதற்கு நிதியைப்பெற குறுந்தவணைக் கடன்பாடுகளில், அதிகரித்த நிலையில் நாடு தங்கியிருக்கும் இவ்வேளையில், இக்கணக்குகளில் இலங்கையின் நிலுவைகளை அதிகரிக்கவிடுதல் பொருத்தமுடையதாக அமையவில்லை. இந் நிலுவைகளில் எவ்வித வட்டியும் அதிகரிக்காத நிலையிலும் அண்மைக்காலங்களில் கிடைக்கத்தக்க குறுந்தவணைக் கொடுகடன்களில் விதிக்கப்பட்ட வட்டிவீதங் கள் ஏறக்குறைய 8 சதவீதமாக விளங்கின. விரைந்தநிலையில் இந்நாடுகளில் இருந்து பெறும் கொள்வனவுகள் அதிகரிக்கப்படுமென்று உறுதிப்படுத்தப் படும்முறையில் முயற்சிகள் எடுக்கப்பட்டாற்தான் இலங்கைக்குரிய இத் தொகைகள் குறைக்கப்படலாம் இவ்விடயத்தையொட்டி இலங்கையின் வெளி நாட்டுத் தூதரகங்கள் ஆற்றவேண்டிய பணி ஒருபுறமிருக்க இந்நாட்டிலேயே இக்கணக்குகளை மிகக் கவனத்துடன் பார்ப்பது பயன் அளிப்பதாக அமை யும். இலங்கைக்கு இப்போது வழங்கவேண்டிய நாடுகளைப் பார்ப்பின் மிகக் கடுமையான குறைந்த நிரம்பலாக இறக்குமதிகளைக் கூட்டுவதற்கு வாய்ப் புண்டுபோலும். எடுத்துக்காட்டாக, இலங்கைக்கொடுகடன் நிலுவைகளை வைத் திருக்கும் இந்நாடுகள் சார்பான மாற்றுவீதங்களில் நிரம்பல்களைப் பெறமுடி யாத இச்சூழ்நிலையில் மசகெண்ணெயை இலங்கைக்கு வழங்கலாம். இருபுடை வர்த்தக ஒழுங்குகளை அண்மைக்காலத்தில் ஏற்படுத்தியுள்ள ஏனைய சில ஆசிய நாடுகள் சலுகை அடிப்படையில் மசகெண்ணெயைப் பெற்றுள்ளன.

இறக்குமதிகளின் கணிசமான பங்கிற்கு குறுந்தவணைக் கொடுகடன் அடிப் படையிலும் நிரம்பலர் கொடுகடன் வாய்ப்புக்கள் அடிப்படையிலும் நிதி உதவி வழங்குவதனுல் ஏற்படக்கூடிய சார்பற்ற விளைவுகளை இங்கு மிகைபட வலியுறுத் தத் தேவையில்லை. இந்நிதிவசதி சடுதியாகக் கிடைக்கமுடியாத சூழ்நிலை ஏற்ப டின் இந்நாடு மிகப் பெரிய பண நெருக்கடிக்குள் ஆளாக நேரிடும். உயர்ந்த வட் டிக் கட்டணங்கள் என்ற வடிவில் நாட்டிற்குப் பெரும் செலவை ஏற்படுத்துவ தோடு வழக்கமாய் கிடைக்கக்கூடிய வர்த்தகக் கழிவுகளையும் சலுகைகளையும் கிடைக்காமல் செய்யவும்கூடும். இவை அனைத்திற்கும் மேலாக கடுமையாகப் போட்டியிடும் சந்தைகளில் யாம் விரும்பிய முறையில் கொள்வனவு செய்யமுடி யாத தடையை இது ஏற்படுத்தக்கூடுமென்பதே இங்கு வலியுறுத்தற்குரியது. ஏனைய குறைந்தளவு வளர்ச்சிபெற்ற நாடுகள்போல் தனது ஆற்றலுக்கு அப் பாற்பட்ட நிலையில் பொருளாதார சக்திகளுக்கு இலங்கை ஆளாகியுள்ளது. எனி னும், வெளிநாட்டுக் கணக்கு நிலையை ஒழுங்காக வைப்பதற்கு ஒரு முதற்படியாக குறுந்தவணைக் கொடுகடன்களில் தங்கியிருக்கும் தன்மையைக் குறைப்பது மிக

இன்றியமையாத தேவையாக இருக்கிறது. 1970-73இல் குறுந்தவணைப் பொறுப்புக்கள் அடிப்படையில் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் விவரங்களைக் கீழுள்ள அட்டவணை தருகின்றது.

**அட்டவணை 1-6**

**குறுகிய காலக் கொடுகடன்(அ)**

(ப. இ. ரூபாய்களில்)

| | 1970 | | 1971 | | 1972 | | 1973 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறுகைகள் | கொடுப்பனவுகள் | பெறுகைகள் | கொடுப்பனவுகள் | பெறுகைகள் | கொடுப்பனவுகள் | பெறுகைகள் | கொடுப்பனவுகள் |
| 1. இருபுடை வர்த்தக நிலுவைகளின் மாற்றம் .. | — | 75 | — | 57 | — | 11 | 1 | — |
| 2. வெளிநாட்டு வங்கிகளிலிருந்து பெற்ற கடன்பாடுகள் .. | 123 | — | — | 81 | 12 | — | — | 112 |
| 3. குறுகிய காலக் கொடுகடன்கள் ... | 434 | 282 | 658 | 614 | 593 | 570 | 781 | 644 |
| 4. நிரம்பலர் கடன் ... | 85 | 80 | 58 | 65 | 53 | 84 | 240 | 95 |
| 5. ஏனையவை (இ) ... | 31 | 7 | 21 | 14 | 88 | 38 | 36 | 111 |
| மொத்தம் | 673 | 444 | 737 | 831 | 746 | 703 | 1,058 | 962 |

(அ) ப. நா. நி. செய்துள்ள கொடுக்கல் வாங்கல்கள் நீக்கப்பட்டுள்ளது

(ஆ) தற்காலிகமானவை.

(இ) சிறப்புக் கணக்கு நிலுவைகளையும், வர்த்தக வங்கி பொறுப்புக்களையும், சீனாவிற்கு சார்பாய் இருந்த காலத்தில் நிலவிய சீனக் கணக்கு நிலுவையையும் உள்ளடக்கும்.

சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் பணக்குறையிருப்பது முதலீட்டத்திற்கு மேலாக உள்நாட்டுச் சேமிப்புகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதையே காட்டுகின்றது. நடைமுறைக் கணக்கில் பணக்குறையை ஏற்படுத்தியே உள்நாட்டில் கிடைக்கக்கூடியதை நிறைவுசெய்யும் முறையில் நாட்டின் பொருளாதாரத்திற்குள் வெளிநாட்டுமூலவளங்கள் உள்ளடக்கப்படுகின்றன. இவ்விடைவெளி பல வழிகளில் நிரப்பப்படலாம். அவற்றுள் நீண்டகால தனியார் மூலதனத்தின் உள்ளோட்டம், நீண்டகால அரசாங்க மூலதன உள்ளோட்டம், குறுந்தவணைக்கொடுகடன்களை நாடுவது, வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களைப் பயன்படுத்தல் அல்லது வங்கிப் பொறுப்புக்களை அதிகரிப்பது ஆகியவை ஒருசிலவாகும். இலங்கையை எதிர்நோக்கும் பொருளாதாரச் சூழ்நிலை, இந்நாட்டின் பணக்குறையை ஈடுசெய்வதற்கு நீண்டகால மூலதனங்களில் தங்கியிருப்பதே பொருத்தமுடைத்து என்பதனை வலியுறுத்துகின்றது. எனினும் நடைமுறையில், 1973இல் நிலவிய போக்குகள் இத்தன்மையுடையதாய் இருக்கவில்லை. 1973இன் மூலதனக் கணக்கினது கொடுக்கல்வாங்கல்களில்பகுப்பாய்வு, நடைமுறைகணக்குக்குறைக்கு நிதி உதவ கையாளப்படும் வழிமுறைகளிலுள்ள அடிப்படைக் குறைபாட்டைச் சுட்டிக்காட்டுகிறது. 1968ற்குப்பின் வெளிநாட்டு மூலவள இடைவெளியை நிரப்ப குறுகியகால இடைக்காலக் கொடுகடன்களிலேயே இலங்கை பெரிதும் தங்கியிருந்த தன்மை தெரியவருகிறது. இலங்கையின் வெளிநாட்டு நிதிஉதவியில் மீண்டெழும் குறுந்தவணைக் கொடுகடன் நிலையான தன்மையைப் பெற்று விட்டதை மேலேயுள்ள அட்டவணை காட்டுகிறது.